Volume-12 Issue-01 July-2025
Price Rs. 25

# அருள் ராஜயோகம்

மலர் –12 இதழ் – 01 ஜூலை–2025

★ ஆன்மீகம் ★ ஜோதிடம் ★ மருத்துவம் ★ மாதஇதழ்




"ஒரு மனிதனை யார் கைவிட்டாலும்
ஆன்மீகம் கைவிடாது!"

– Dr. K.ராம் Ph.D., (USA)

இம்மாத வெளியீடு

# இப்போது விற்பனையில்..!




ஓர் ஆண்டின் 366 நாட்களுக்குரிய திருத்தலங்களின் ஸ்தல வரலாறுகள், ஸ்தல பரிகார குறிப்புகள், ஸ்தலத்திற்கு உரிய மந்திரங்கள், ஸ்தலத்தின் பூஜைக்குரிய விளக்கங்கள், ஸ்தல அமைவிடம், வழித்தடங்கள் அத்தனையும் தாங்கி அரிய படைப்பாக போற்றி பாதுகாக்க வேண்டிய அரிய பொக்கிஷம் இதுவே!

**தவற விடாதீர்கள்..!**

**இன்றே வாங்குங்கள்..!**

நமது பதிப்புகள் அனைத்தும் கிடைக்கும் இடங்கள்


*Publishers:*
**APSARA PUBLICATIONS**, # 18/67, P.V.Koil 1st Street, Pudupet, Royapettah, Chennai - 600 014
Phone: 044- 2811 6770 | Cell: 72999 21880 / 88386 38900
E-mail: apsarapublications@gmail.com | www.apsaraepublications.com


**விஜயா பதிப்பகம்**

20, இராஜ வீதி, டவுன் ஹால், கோவை -1. போன்: 0422- 2394614, 2382614, செல்: 90470 87058

மற்றும் அனைத்துக் கிளைகளிலும் கிடைக்கும்

**ஸ்ரீ தயவு சித்தாஸ்ரமம்** திருவண்ணாமலை - 606 603. செல்: 99448 00220

Volume-12 Issue-01 July-2025

# அருள் ராஜயோகம்

மலர் - 12 இதழ் - 01 ஜூலை-2025

●ஆன்மிகம் ●ஜோதிடம் ●மருத்துவம் ●மாதஇதழ்

அன்புள்ளம் கொண்ட வாசக வாசகியர்களுக்கு,

ஆழமான ஆன்மீகத்தையும் அறியவேண்டிய சாஸ்திரத்தையும் அற்புதமான மனோதிடத்தையும் வாரி வழங்கும் அருள் ராஜ யோகம் என்கிற அற்புதமான ஆன்மீக மாத இதழை பார்க்கக்கூடிய படிக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்த பாக்கியவான்கள் ஆகிய உங்களுக்கு குலதெய்வ ஆசியும் நவகிரக அனுகிரகமும் முழுமையாக கிடைக்கவும் நாளும் பொழுதும் நன்மைகள் பெருகவும் உண்மையாக பிரார்த்திக்கின்றேன்.

12ம் ஆண்டின் முதல் இதழ் இது. அதனை முன்னிட்டு 12ம் ஆண்டு சிறப்பிதழாகத் தயாரித்து வழங்குகின்றோம். தொடர்ந்து ஒத்துழைப்பு நல்கி வரும் வாசக உள்ளங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆடி மாதம் அம்மன் மாதம் என்பார்கள். முடிந்தவரை ஆடிமாதச் சிறப்புகள் மட்டுமின்றி இதர வழக்கமான அம்சங்களையும் இடம்பெறச் செய்துள்ளோம்.

ஆடி மாதச் சிறப்பிதழில், அம்மனுக்குரிய போற்றிகள் இடம்பெறுவதே சிறப்பானதாக இருக்கும். எனவே அவை ஒவ்வொரு பக்கத்திலும் இடம்பெற்று உள்ளன. அதனை அனைவரும் விரும்புவீர்கள் என நம்புகின்றேன்.

நெஞ்சிற்கினிய நேயர்களே!

ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது என்ற என்னுடைய ஆழமான ஆன்மிகத்தையும் பதிவு செய்து அகில உலகத்தில் உள்ள அத்தனை தெய்வங்களின் அனுக்கிரகமும் ஈரேழு உலகத்தின் உள்ள எல்லா சக்திகளின் ஒட்டுமொத்த ஆசிர்வாதமும், உங்களுக்கும் உலக மக்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டிய பிரார்த்தனையோடும் வாழ்த்துக்களோடும்.






**ஆசிரியர்**
**S R J "ராஜயோகம்"**
**Dr. K.ராம் Ph.D., (USA)**

ஓம் அங்காள அம்மையே போற்றி, ஓம் அருளின் உருவே போற்றி, ஓம் அம்பிகை தாயே போற்றி,



# நாக தோஷம் நீக்க வழிபாட்டுமுறைகள்!



## சிறப்புக் கட்டுரை:



உலகெங்கிலும் உள்ள அருள் ராஜயோகம் வாசகர்களுக்கு எனது நல்வாழ்த்துகளை முதலில் தெரிவித்துக் கொள்வதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அம்மனுக்கும், நாகத்திற்கும் நிறையவே தொடர்பு உண்டு. நாகக் குடையின் கீழ் அம்மன் வீற்று இருப்பதைக் காணலாம். அம்மன் சிறப்பிதழில் நாக தோஷம் பற்றிய கட்டுரை இடம்பெறுவது பொருத்தமானதாக இருக்கும் என நினைக்கின்றோம் இந்தக் கட்டுரையில் நாம் பார்க்கப் போவது, நாக தோஷம் பற்றித்தான்.

நாகதோஷம் நிவர்த்தியாகச் செய்ய வேண்டிய வழிபாட்டு முறைகளை, நமது தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில், நிறைய முறை பதிவு செய்து இருக்கிறோம். நீங்கள் ஏதாவது ஒரு இடத்தில், ஜாதகம் பார்க்கும்பொழுது ராகு தோஷம், நாக தோஷம், சர்ப்ப தோஷம் என்று சொல்லிச் சொல்லி உங்களுடைய பயம் அதிகமாகி இருக்கிறது என்பது தான் எதார்த்தம். பொதுவாகவே சாஸ்திர ரீதியாக நாகதோஷம் என்பது, அவ்வளவாக யாருடைய ஜாதகத்துக்கும் பாதிப்பு கொடுக்கிறதில்லை என்கிற விஷயத்தை நாம் முன்பே பதிவு செய்து இருக்கிறோம்.

இந்த நாக தோஷம் என்கிற பெயர் எதனால் வந்தது என்றால், பொதுவாகவே லக்னத்தில் ராகு பகவான் இருந்தார் எனில் ஏழாம் இடத்தில் கேது பகவான் இருப்பார். லக்னத்தில் ராகு இருப்பது பற்றி நமக்கு கவலை இல்லை. ஆனால் ஏழாம் இடத்தில் கேது இருக்கும் போது அது கல்யாண ஸ்தானம் என்று சொல்லக் கூடிய களஸ்திர

ஓம் அன்பின் வடிவே போற்றி, ஓம் அனாத ரட்சகியே போற்றி,ஓம் அருட்பெருஞ்ஜோதியே போற்றி




ஸ்தானத்தில் இந்த கேது பகவான் இருக்கும் பொழுது, அது தோஷம் இருக்க கூடியது என்று நினைத்துக் கொண்டு, பயப்படுகிறோம்.

ஏனெனில் நிறையப் பேர் பயப்படும் இடம் ஏழாமிடம். கல்யாண சம்பந்தப்பட்ட கங்கண யோகத்தைக் கொடுக்கக்கூடிய அமைப்பு இருப்பதால், அந்த இடத்தில் வந்து இந்த கேதுபகவான் இருக்கிறார் என்றால் நமக்கு கல்யாணம் சம்பந்தப்பட்ட விஷயங்களில், ஏதாவது பாதிப்பு கொடுக்குமோ என்கிற கவலை இயற்கையாகவே எல்லோருக்கும் இருந்து கொண்டிருப்பது எதார்த்தமான உண்மை.

**அதே மாதிரி குடும்ப ஸ்தானம் சொல்கிறோம் இல்லையா?**

லக்னத்துக்கு இரண்டாமிடம் என்று சொல்லக்கூடிய தன, குடும்ப, வாக்கு ஸ்தானத்தில் ராகு பகவான் இருந்தார் எனில் அதற்கு நேர் ஏழாம் இடம் அடுத்து பார்த்தீர்கள் என்றால் எட்டாம் இடத்தில் கேது பகவான் இருப்பார்.

எட்டாம் இடம் எனப்படுவது, முழுக்க முழுக்க பெண்களுக்கு மாங்கல்ய ஸ்தானமாக சாஸ்திரத்தில் கொடுக்கப்பட்டு உள்ளது. மாங்கல்ய ஸ்தானத்தில் கேது பகவான் இருந்தார் என்றால், மண வாழ்க்கை பாதிக்குமா? என்கிற பல்வேறு சந்தேகங்கள், பல்வேறு பய உணர்வுகள் இருக்கும் என்பது எதார்த்தம் தான். இதுவெல்லாம் சாஸ்திரம்



சொல்லி இருந்தாலும், லக்கினத்தில், இரண்டாம் இடத்தில், ஏழாம் இடத்தில், எட்டாம் இடத்தில் பாவ கிரகம் இருந்தது என்றால், அதுவும் சாயா கிரகங்கள் என்று சொல்லக் கூடிய இந்த ராகு அல்லது கேது பகவான் இருந்தார்கள் என்றால் அதை சர்ப்ப தோஷம், நாக தோஷம் என்கிற விஷயத்தை சாஸ்திரம் சொல்லி வைத்து இருக்கிறது. திருமணமே ஆகாது, கடுமையான தோஷம் என்று எந்த சாஸ்திரமும் கிடையாது.

ராகு தோஷம் என்கிற நாக தோஷம் என்கிற சர்ப்ப தோஷம், பித்ரு தோஷங்கள் வந்து உண்மையாகவே உங்களைப் கடுமையாகப் பாதிக்கிறது என்றால் கடவுள் எதற்கு விக்கிரகமாக உட்கார்ந்து கொண்டு இருக்கிறார்? கடவுள் எதற்கு யாமிருக்கப் பயமேன் என்று சொல்கிறார்? கடவுள் எதிரில் அவரது சன்னிதிக்கு வரும்போது, எல்லாமே நிவர்த்தி ஆவதைப் பார்க்க முடியும்.

கொடுமையான கடுமையான கஷ்டங்களை கடவுள் தருவதில்லை. அப்படியே தரக்கூடிய அமைப்பில் இருந்தால் கூட சாஸ்திரத்தில் அதற்கான வழிகளை நமக்குச் சொல்லி வைத்து இருக்கிறார் என்பதை, இந்த நேரத்தில் மீண்டும் மீண்டும் தெளிவு படுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஆக இந்த ராகு தோஷம் எனப்படுவது, சின்ன வயதில் திருமணம் பண்ணும் பொழுது ஏற்படுவதே. அதாவது காலா காலத்தில் திருமணம் என்று சொல்கிறோம் இல்லையா? திருமண வயதிற்கு முன்பே திருமணம், சரியான திருமண வயதில் திருமணம் உறுதி செய்வது எனத் திருமணம் பண்ணும் பொழுது, இந்த ராகு தோஷம் அல்லது நாக தோஷம் சர்ப்ப தோஷம் என்பது, யாரைத் திருமணம் பண்ணலாம் என்று உறுதி பண்ணி பெரியவர்கள் பேசினார்களோ, அந்த மணமகன் மாறக்கூடிய அந்த மணமகள் மாறக்கூடிய ஒரு சூழல் ஏற்படும் என்பது எதார்த்தம். இது தான் சாஸ்திர இயற்கை. இப்படி இருக்கும் பொழுது இப்பொழுது பார்த்தீர்கள் என்றால், *21* வயதில் திருமணம், *24* வயதில் திருமணம் என்றில்லாமல், நிறையப் பேர் தன்னுடைய வாழ்க்கையில் வருமானத்திற்கான வழிவகைகளை உறுதி செய்துவிட்டு, அதற்கு அப்புறம் தான் திருமணம் என்கிற விஷயத்தில், தெளிவாக, உறுதியாக இருந்து கொண்டு இருக்கிறார்கள். ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி, அவசரப்பட்டு காதல் சம்பந்தப்பட்ட விஷயங்களில் ஈடுபாடு

**ஓம் அன்னப்பூரணியே போற்றி, ஓம் அமுதச் சுவையே போற்றி, ஓம் அருவுரு ஆனவளே போற்றி**



இருந்தால் கூட , அந்த காதல் என்ற விஷயத்தில் கூட ஒரு முடிவெடுக்கிறார்கள். என்ன முடிவு?

நாம் இப்படியே காதலித்துக் கொண்டு இருக்கலாம். நம் இருவருக்கும் நல்ல உத்தியோகம் கிடைக்கட்டும் நல்ல வருமானம் கிடைக்கட்டும், அதற்கப்புறம் கல்யாணம் பண்ணிக்கலாம் என்று ஒரு தெளிவோடு தான் காதல் விஷயத்தில் உறுதியாக இருக்கிறார்கள் என்கிற விஷயத்தையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய அமைப்பில் இருந்து கொண்டு இருக்கிறோம்.

பெரியவர்களாக இருந்தாலும், சிறியவர்களாக இருந்தாலும் ஆக, சரியான வயசு அப்படீங்கிறதை விட, 24 வயதுக்கு மேல் எந்த ஒரு ஆணுக்கும், எந்த ஒரு பெண்ணுக்கும் திருமணம் செய்கிறீர்களோ அவர்களுக்கு ராகு தோஷம் பாதிக்காது என்கிற விஷயத்தை இந்த நேரத்தில் சந்தோஷத்தோடு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதே மாதிரி ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும், சரி அதாவது இருபத்தி நாலு வயதிற்கு மேல், 26 வயதிற்கு மேல் திருமணம் செய்தீர்கள் என்றால், கண்டிப்பாக உங்களுடைய திருமண வாழ்க்கையில் நாக தோஷம், சர்ப்ப தோஷம் எட்டிப் பார்க்காது. அதாவது உங்களுடைய திருமணத்தில் கீர்த்தி என்கிற மகிழ்ச்சி நிச்சயமாக இருக்கும் என்பது உண்மையாக இருந்து கொண்டுள்ளது.

யாருடைய ஜாதகத்தில் மேஷம், ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம் இந்த ராசிகளில் வந்து ராகு பகவான் இருக்கிறாரோ அந்த ராசிகளுக்கு, இந்த ராகு தோஷம், சர்ப்ப தோஷம் பாதிக்கிறது இல்லை.

அது தோஷம், அப்படிங்கிற மூன்றெழுத்துக்கு மேலே யோகம் அப்படிங்கிற மிகப்பெரிய அமைப்புக்கு வந்த விஷயத்தையும் தெரிந்து கொள்கிறேன். அது மட்டும் அல்லாமல் யார் ஒருவர் ஜாதகத்தில் மேஷம், ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம் இந்த ராசிகளில் வந்து ராகு பகவான் இருக்கிறாரோ அந்த ராசிகளுக்கு ராகு பகவான் வந்து தோஷத்தை கொடுக்க மாட்டார்; மாறாக யோகத்தை புதையல் யோகத்தைக் கொடுப்பார் சாஸ்திர விதிப்படி என்பதை இந்த நேரத்தில் சந்தோஷமாக சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். ராகு தோஷம் உள்ளவர்களுக்கு அது நிவர்த்தியாக எளிய பரிகாரம் சொல்கிறேன்.

பொதுவாகவே ராகு தோஷம் உள்ளவர்கள் .உங்களுடைய ஜாதகத்தில் ராகு பகவான் எந்தெந்த சாரங்களில் நட்சத்திர கதி வாங்கி வந்திருக்கிறாரோ, அதற்குத் தகுந்த மாதிரி திருப்பதிக்குப் போகிற வழியில் இருக்கக்கூடிய திருக்காளத்தி அல்லது அந்த நட்சத்திர கால் அதாவது எந்த நட்சத்திர சாரம் வாங்கி வந்திருக்கிறாரோ, அதற்குத் தகுந்த மாதிரி, திருநாகேஸ்வரம் என்று சொல்லக்கூடிய கும்பகோணத்துக்கு பக்கத்தில் உள்ள கோவிலுக்குப் போய் விட்டு வரவேண்டும்.

இதெல்லாம் இருக்க, பொதுவாகவே உங்களுடைய ஜாதகத்தில் எந்த இடத்தில் ராகு பகவான் இருந்தாலும், எந்த இடத்தில் கேது பகவான் இருந்தாலும் அது தோஷம் அப்படிங்கற ஒரு அமைப்பில் இருந்தது என்றால், ராகு தோஷம் மற்றும் கேது தோஷம் உள்ளவர்கள் சாதாரணமாகவே இந்த திருக்காளத்தியோ அல்லது திருநாகேஸ்வரமோ போகும் பொழுது, ஒரு சிறிய சர்ப்ப சிலையை, நாகர் சிலை என்று சொல்வார்கள் இல்லையா அந்த நாகர் சிலை வாங்கி வந்து அந்த கோயிலில் உள்ள உண்டியலில் காணிக்கை போட்டு விட்டு அங்கு சுவாமி தரிசனம் பண்ணி விட்டு வந்தால் போதும். அதுவே ராகு தோஷத்துக்கு உண்டான எளிய பரிகாரம் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்த மாதிரிப் போக முடியாத அமைப்பில்



ஓம் ஆதி சக்தியே போற்றி, ஓம் ஆதிப்பரம்பொருளே போற்றி, ஓம் ஆதிபராசக்தியே போற்றி



உள்ளவர்கள் கூட கவலைப்பட வேண்டியது இல்லை. உங்களுடைய வீட்டுக்குப் பக்கத்தில் கூட பிள்ளையார் கோவில் இருக்கும் இல்லையா?

ஏதாவது ஒரு பிள்ளையார் கோயிலில், அதாவது பிள்ளையாருக்கு தனிச்சன்னதி இருக்க வேண்டும் அல்லது ஏதாவது ஒரு கோயிலில் பிள்ளையாருக்கு வலப்பக்கமோ, இடப்பக்கமோ தனிச் சன்னதி வைத்து இருப்பாங்க, அந்த மாதிரி தனிச்சன்னிதி இருக்கக் கூடிய பிள்ளையாரை ராகு சிலையோடு அதாவது நாகர் சிலை வாங்கிட்டுப் போய், அந்த நாகர் சிலையை உங்கள் கையில் வைத்துக் கொண்டு அடுத்தவர்கள் பார்க்காதவாறு உள்ளங்கையில் வைத்து கைகூப்பி மூன்று முறை அந்த பிள்ளையாரை வலம் வந்த பிறகு, உங்களுடைய குலதெய்வத்தை நினைத்து அதற்கு அப்புறம் ராகு தோஷத்தை நிவர்த்தியாக வேண்டும் என நினைத்து, நீங்கள் பண்ணக்கூடிய அந்த திருமணம் சம்பந்தப்பட்ட வாழ்க்கையை நினைத்து அந்த சிலையை பிள்ளையார் கோவில் உண்டியலில், போட்டு விட்ட் வந்தீர்கள் என்றாலே, கண்டிப்பாக இந்த தோஷம் நீங்கும். நாக தோஷம் உங்எளைப் பாதிக்காது.

எல்லாவற்றுக்கும் மேலாக சாதாரணமாகவே பௌர்ணமி என்று அரசமரத்தடியில் இருக்கக் கூடிய பிள்ளையாரை மூன்று முறை வலம் வரும்போது அந்த நாகர் சிலையை உள்ளங்கையில் வைத்து யாருக்கும் தெரியாமல் கை கூப்பி மூன்றாவது முறை வலம் முடிந்த பிறகு, அரசமரப் பிள்ளையாருக்கு அருகில் உள்ள உண்டியலில் போட்டு விட்டு வரலாம். ஒருவேளை அரசமரப் பிள்ளையாருக்கு அருகில் உண்டியல் இல்லையென்றால், அரச மரப் பிள்ளையாருக்கு எதிரில், சிறிய ஆறு அல்லது ஏரி குளம் இருக்கும். அந்த குளத்துக்குள் போட்டு வரலாம். இது மிக மிக எளிய பரிகாரம். இந்த பரிகாரம் செய்து வேண்டி வந்தீர்கள் என்றால் ராகு தோஷம் விலகுகிறதோ இல்லையோ, உங்களுக்கு சந்தோஷம் என்பது நிச்சயமாக கிடைக்கும் என்பது தான் நிதர்சனமான உண்மை.

அதனால் பரிகாரம் என்கிற பெயரில் தேவையில்லாத செலவுகள், தேவையில்லாத பிரச்சனைகளை ஏற்படுத்த வேண்டாம். செய்ய முடிகிறவர்கள் இந்த மாதிரி சாதாரண விஷயத்தை உங்களுக்கு பரிகாரமாக செய்து தான் ஆக வேண்டும் என ஒரு அமைப்பு இருந்து, ஒரு வாய்ப்பு இருந்தது என்றால் அதற்கு விருப்பப்பட்டால், தாராளமாக நீங்கள் செய்யலாம். ஆனால் இந்த ராகு தோஷம், கேது தோஷத்துக்கு பரிகாரம் அப்படிங்கிறது அவசியம் இல்லை என்கிற விஷயத்தை இந்தக் கட்டுரை மூலமாக உபகாரமாக, உங்களுக்கு சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

ராகுவாக இருந்தாலும், கேதுவாக இருந்தாலும், குரு பகவானாக இருந்தாலும், சனிபகவானாக இருந்தாலும், உங்களோட வாழ்க்கையில் அந்த சந்தோஷம் அப்படிங்கிற விஷயத்தை தவிர்க்கக்கூடிய அளவுக்கு தோஷம், அதாவது தோஷம் இருக்கக் கூடிய விஷயத்துக்கு எத்தனை தோஷம் இருந்தாலும் அந்த தோஷங்கள் நிவர்த்தியாகும். அதற்கு எளிய பரிகாரங்களை ராஜயோகம் டிவி யுடியூப் சேனலில், சொல்லி இருக்கிறேன். சாதாரண திருமண வாழ்க்கையில் கூட தேவையில்லாத தோஷம் இருக்கக்கூடாது, சந்தோஷம் கிடைக்க வேண்டும் என்பதற்காக உண்மையான விஷயங்களைத் தொடர்ந்து உங்களுக்கு நன்மையாக கொடுத்துக் கொண்டு இருக்கிறேன். எது எப்படி இருந்தாலும் உங்களை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது என்கிற ஆழமான விஷயத்தைப் பதிவு செய்கிறேன்.

இந்தக் கட்டுரையைப் படிக்கிற எல்லோருக்குமே குலதெய்வ ஆசையும் நவக்கிரக அனுக்கிரகமும் முழுமையாக கிடைக்க வேண்டும், ஈரேழு உலகத்தில் உள்ள எல்லா சக்தியின் ஒட்டு மொத்த ஆசீர்வாதமும் கிடைக்க வேண்டும் என்ற பிரார்த்தனையோடு, வாழ்த்துகளுடன் உங்கள்.

**SRJ "ராஜயோகம்"**
**Dr. K.ராம் Ph.D., (USA)**

**ஓம் ஆனந்தவல்லியே போற்றி, ஓம் ஆன்ம சொரூபினியே போற்றி, ஓம் ஆங்காரி அங்காளியே போற்றி**

உ

SRJ "ராஜயோகம்" Dr.K.Ram Ph.D (USA)

# SRJ GEMS™ JEWELLERS

எங்கேயும் எப்போதும் SUCCESS

**நீங்கள் எந்த தேதியில், ராசியில், நட்ஷத்திரத்தில், லக்கினத்தில் பிறந்தவராக இருந்தாலும்... ஏன்?**
**எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும்**

'நல்ல நேரமும்' நன்மையான காலமும்'ஜாதகத்தில் இருப்பது சத்தியமான உண்மை

உங்களுடைய ''ஜாதகம்'' ''கைரேகை'' ''பிறந்ததேதியை'' ஆய்வு செய்து பிரபஞ்சத்தில் உங்களுக்காக விதிக்கப்பட்டுள்ள ''யோக பலன்களையும்'' ''பாவ புண்ணியங்களையும்'' ''பரிகார நன்மைகளையும்'' உறுதியாக தெரிந்துகொண்டு ''எண்கணித சாஸ்திரம்'' ''வாஸ்து சாஸ்திரம்'' ''தெய்வ பிரசன்ன சாஸ்திரம்'' ''விருட்ஷ சாஸ்திரம்'' ''மச்ச சாஸ்திரம்'' ''மந்த்ர'' ''தந்த்ர' சாஸ்திரம் ''சாமுத்ரிகா சாஸ்திரம்'' ''பஞ்சபூத சாஸ்திரம்'' ''பரிகார சாஸ்திரம்'' ''அதிர்ஷ்டரத்தின சாஸ்திரம்'' மற்றும் ''அஸ்ட்ரோ பயோரித சாஸ்திர'' விதிகளின்படி

## ''திக்கற்ற யாவரும்'' ''ஒப்பற்ற பயன்பற''

## SRJ "ராஜயோகம்" Dr. K.ராம் Ph.D., (USA)

''அண்ட நிழலும் இல்லை'' ''ஆதரிப்பார் யாரும் இல்லை''
ன்ற நிலையில் ஏக்கப்பட்டுக் கொண்டிருக்கும், மனித உள்ளங்களை ஊக்கப்படுத்தி உண்மையான வாழ்வியலில்
''அவமானப்பட்ட'' ஒவ்வொரு மனிதனுக்கும் வெகுமானம் உண்டு!
என்ற ஆன்மீக உண்மையை மதங்களைக் கடந்து உலக நாடுகளில் உறுதிப்படுத்தி,
''சர்வமத ஜோதிட மகிரிஷி'' என்று பாராட்டும் பெற்றதோடு,
சிங்கப்பூர், மலேசியா, ஸ்ரீலங்கா உட்பட ஆஸ்திரேலியாவில் ''சிட்னி முருகர் கோவில்'' மற்றும் ''ஏடிபிசி வானொலி''-யில் சிறப்பு ஆன்மீக நேரலை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மன், சுவிட்சர்லாந்து, கனடா, இங்கிலாந்து (லண்டன்) உட்பட மேலை நாடுகளில் உள்ள நோய்களின் இக்கட்டான கேள்விகளுக்கு, அப்பட்டமான ஆன்மீக விளக்கங்கள் கொடுத்து, வெளிநாட்டு மக்களாலும், பத்திரிகைகளாலும், பாராட்டுப் பெற்றதோடு, ஜோதிடம், ஆன்மீகம் உள்ளிட்ட துறைகளில் சிறந்த சேவைக்காக ''மனிதருள் மாணிக்கம்'' ''மகாத்மா காந்தி'' ''சாதனைச் சிகரம்'' ஆகிய விருதுகளும் பாராட்டுக்களும் பெற்றதோடு ''சாணத்திற்கும்'' ''மெஞ்ஞானத்திற்கும்'' உள்ள தாத்பர்யங்களை ''விஞ்ஞானத்தோடு'' விளக்கப்படுத்தி, ஆளுநர் அவர்களால் ''ஆன்மீகச் செம்மல்'' விருது பெற்ற



## SRJ "ராஜயோகம்"

## Dr. K.ராம் Ph.D., (USA)

**அவர்களை நேரில் சந்திக்க முன்பதிவிற்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**

SRJ "ராஜயோகம்" Dr.K.Ram Ph.D (USA)

# SRJ GEMS™ JEWELLERS

எங்கேயும் எப்போதும் SUCCESS

NO: 139, PANNA PLAZA, ARCOT ROAD, KODAMBAKKAM, CHENNAI - 600 024, TAMIL NADU, INDIA.

OFFICE : 044 - 24849187
MOBILE :
9940431377, 9677276129,
9952991118, 9840160068

SINGAPORE / MALAYSIA :
No: 250, BRICK FIELDS,
LITTLE INDIA,
KUALA LUMPUR - 50470.
MOBILE : +91 9952991118

SRILANKA :
NO: 81, 1/5 MAHA,
VIDIYALAYA MAWATHA,
COLOMBO - 13.
OFFICE : +94112448303
MOBILE : +94777254163

AUSTRALIA :
NO: 65, HOMEBUSH ROAD,
STRATHFIELD SYDNEY,
AUSTRALIA - 2135.
MOBILE : +91 9952991118

LONDON :
NO: 163, STAINES ROAD,
MIDDLE SEX TWS 3JZ,
UNITED KINGDOM.
MOBILE : +91 9952991118

ஓம் ஆறுமுகன் அன்னையே போற்றி, ஓம் ஆதியின் முதலே போற்றி, ஓம் ஆக்கும் சக்தியே போற்றி

# அம்மனுக்கு உகந்த ஆடி புரம்!

**ஆடி மாதத்திலேயே மிகவும் விசேஷமான நாளாக கருதப்படும் ஆடிப்பூரம், உலக மக்களை பல்வேறு இன்னல்களிலிருந்து காப்பதற்காக அம்பாள் அவதரித்த நாளாக கருதப்படுகிறது. இந்த விழா ஆடி மாதத்தில் வரும் பூர நட்சத்திரம் உச்சத்தில் இருக்கும் போது கொண்டாடப்படுகிறது.**

ஆடிப்பூரம் இந்த ஆண்டு ஆகஸ்ட் 1ஆம் தேதி கொண்டாடப் படுகிறது. அதுமட்டுமின்று, ஸ்ரீவில்லிபுத்தூர் வைணவம் போற்றும் 12 ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாள் அவதரித்த நாள் இதுவாகும். இந்த நல்ல நாளில் மறக்காமல் அம்பிகைக்கு செய்ய வேண்டிய பூஜைகள், பரிகாரங்கள் என்ன என்பதை பற்றி பார்க்கலாம்

## ஆடிப்பூர வழிபாடு பலன்கள் :

இந்த நாளில் ஆண்டாளை தரிசனம் செய்தால் திருமணமாகாத பெண்களுக்கு விரைவில் திருமணம் நடக்கும், அம்பிகையை வணங்கி வளையல்



வாங்கிக் கொடுத்தால் திருமணமான பெண்களுக்கு பிள்ளை பாக்கியம் கிடைக்கும் என்பது ஐதீகம்.



## ஆடிப்பூர வழிபாடு கோவில்கள்:

இந்த நாளில் ஸ்ரீவில்லிப் புத்தூர் ஆண்டாள், மதுரை மீனாட்சியம்மன், திருவண்ணாமலை அம்மன் கோவில்உள்ளிட்ட பல கோவில்களில் அம்ம னுக்கு வளைகாப்பு விழா வெகு விமர்சையாக நடைபெறும். அதோடு சிவன் கோவில்களிலும் அம்மனை அலங்கரித்து சிறப்பு வழிபாட்டு பூஜைகள், பல்வேறு வழிபாட்டு நிகழ்ச்சிகள், தேரோட் டமும் நடைபெறும். இந்த ஆடிப்பூரம் விழா சைவ ஆலயங்களில் மட்டுமல்லாமல், வைணவ (பெருமாள்) ஆலயங்களிலும் மிகவும் விசேஷமாக கொண்டாடப்படக்கூடிய விழாவாகும்.

## அம்பாளின் படத்துக்கு வளையல் அலங்காரம்

உலக உயிர்கள் அனைத்தையும் தன்னுள் அடக்கி வைத்திருக்கும் அன்னைக்கு இந்த நாளில் வளைகாப்பு நடத்தப்படுகிறது. பெண்கள் தலை குளித்து விட்டு, பூஜையறையில் உள்ள அம்பாளின் படத்தை எடுத்து சுத்தம் செய்து, மஞ்சள், குங்குமம்வைக்க வேண்டும். பின்னர், அதன் மேல் சிவப்பு நிறத் துணியை விரித்து, அதன் மேல் அம்பாளின் திருவுருவப் படத்தை வைத்து அலங்காரம் செய்ய வேண்டும். பிறகு கண்ணாடி வளையல் களை மாலையாகக் கட்டி அம்பாளின் படத்திற்கு அணிவிக்க வேண்டும். நாம் எப்படி பூமாலையை அம்பாளின் படத்திற்கு அலங்கரிப்போமோ அதேபோல கண்ணாடி வளையல் மாலையை அணிவிக்க வேண்டும். அம்மனுக்கு வளைகாப்பு முடிந்ததும் அன்னையை அலங்கரித்த வளையல்கள் அனைத்தும் பெண் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படும். ஆடிப்பூரம் நாளில் அம்மன் வளைகாப்புக்கு வளையல் வாங்கிக் கொடுத்தால் புத்திரபாக்கியம் கைகூடும் என்பது நம்பிக்கை. குழந்தையில்லாத பெண்களுக்கு விரைவில், குழந்தை மடியில் தவழும்.

**ஓம் அதிபரமேஸ்வரியே போற்றி, ஓம் அகிலத்தின் ஒளியே போற்றி, ஓம் ஈசனின் உமையவளே போற்றி,**

# சக்தி தரும் ஆடி மாதம்!



ஆடி மாதம் என்றதும் நினைவுக்கு வருவது அம்மன் கோயில்களில் நடைபெறும் விழாக்களும் தான். ஆடி வெள்ளி தொடங்கி, ஆதி பதினெட்டு, ஆடி அமாவாசை, ஆடிப் பூரம் என சிறப்பு வழிபாட்டு தினங்களை கொண்டது ஆடி மாதம்.

அம்மன், அய்யனாரப்பன், மதுரை வீரன், மாடசாமி, கருப்பணசாமி உள்ளிட்ட கிராம தேவதைகளுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெறுவது இந்த மாதத்தில்தான். அம்மனுக்கு உகந்த ஆடி மாதத்தில் கூழ் வார்த்தல் வடமாவட்டங்களில் முக்கியமான நிகழ்வு.

அதனுடன், கத்தரி, மொச்சையுடன் சேர்த்து வைக்கப்படும் கருவாட்டுக் குழம்பையும் அம்மனுக்கு படைப்பது அற்புதமான நிகழ்வு. தென் மாவட்டங்களைப் பொறுத்தவரை தீ மிதிப்பது, பால் குடம் எடுப்பது, பொங்கல் வைப்பது போன்றவை அதிகம் நடைபெறும் மாதம் ஆடி. அம்மியே பறக்கும் ஆடிக் காற்றில், தொற்று நோய்களும் வேகமாக பரவும் என்பதாலேயே, வீடுகளின் முன்பு வேப்பங்குலை கட்டப்படுகிறது.

பருவமழை தொடங்கும் ஆடி மாதத்தில் ஆறுகள் மற்றும் அதன் கிளை வாய்க்கால்களில் புதுப்புனல் பெருக்கெடுத்து ஓடும். விவசாய நிலங்களை செழிக்க வைப்பதற்காக ஓடி வரும் ஆடி நீர்ப்பெருக்கை, வணங்கி விவசாயிகள் வரவேற்பார்கள்.




ஓம் இன்னல் களைவாளே போற்றி, ஓம் இடர்நீக்குவாளே போற்றி, ஓம் இமயத்து அரசியே போற்றி



> **இதற்கு காரணம், ஆடி மாதத்தில் கிடைக்கும் வேப்பிலைக் கொழுந்துகளுக்கு அபார மருத்துவ, தெய்வீக குணம் உண்டு.**



ஆடி மாதத்தை அடிப்படையாக வைத்துதான் பல சுப நிகழ்ச்சிகளை முன்னோர்கள் நடத்தினர். ஆடியை கற்கடக மாதம் என்றும் அழைக்கிறார்கள்.

மாதங்களைப் பொறுத்தவரை உத்ராயணம், தஷ்ணாயணம் என இரு பிரிவுகள் உள்ளது. இதில் தஷ்ணாயணம் புண்ணிய காலம் ஆடி மாதத்தில் துவங்குகிறது. ஆடி முதல் மார்கழி வரை தஷ்ணாயண காலமாகவும், தை முதல் ஆனி வரை உத்ராயணம் என பிரிக்கப்பட்டுள்ளது. சூரியனின் பாவன இயக்கத்தை (வடகிழக்கு, தென்கிழக்கு) வைத்து இது வரையறுக்கப்படுகிறது.

தஷ்ணாயணம் துவக்கும் ஆடி மாதத்தில் சூரியனில் இருந்து சூட்சும சக்திகள் வெளிப்படும். வேத பாராயணங்கள், மந்திரங்கள், ஜெபங்கள், மாந்த்ரீகம் ஆகியவற்றிற்கு ஆடி மாதம் சிறந்ததாக கருதப்படுகிறது. பிரணாய வாயு அதிகமாக கிடைப்பதும் ஆடியில்தான். ஜீவ ஆதார சக்தி அதிகம் உள்ள மாதமாகவும் இது கருதப்படுகிறது.

ஆடி மாதத்தை சக்தி மாதம் என்றும் பண்டைய ஜோதிட நூல்கள் குறிப்பிட்டுள்ளன. எனவே இந்த மாதத்தில் விதை விதைப்பதை முன்னோர்கள் மேற்கொண்டனர். ஆடிப் பட்டம் தேடி விதை என்ற பழமொழி உருவானதற்கும் இதுவே காரணம்.

உத்ராயண காலத்தில் சூரியனில் இருந்து வெளிப்படும் கதிர்களை விட, தஷ்ணாயண காலத்தில் (ஆடி) சூரியனின் ஒளிக் கதிர்கள் விவசாயத்திற்கு உகந்ததாக இருக்கும். சுற்றுப்புறத்தை தூய்மையாக்கி, தெய்வங்களை (அம்மன்) வழிபட்டு உள்ளுணர்வை மேம்படுத்திக் கொள்ளவும் ஆடி மாதம் பயன்படுகிறது. வேப்பிலையை அம்மனுக்கு சாத்தி வணங்குவதும், கூழ் ஊற்றும் விழா நடத்துவதும் ஆடி மாதத்தில் நடக்கிறது.

இதற்கு காரணம், ஆடி மாதத்தில் கிடைக்கும் வேப்பிலைக் கொழுந்துகளுக்கு அபார மருத்துவ, தெய்வீக குணம் உண்டு. ஆடி மாதத்தில் பொதுவாகவே காற்று அதிகமாக வீசும். அந்தக் காலத்தில் எளிதில் ஜீரணிக்கக் கூடிய வகையிலான உணவுகள் (கூழ்) சாப்பிடுவது நல்லது. இதனால் ஆரோக்கியம் மேம்படும்.

துர்க்கை, காளி உள்ளிட்ட பெண் தெய்வ வழிபாட்டுக்கு உரியதாகவும் ஆடி மாதம் கருதப்படுகிறது. இதேபோல் 18ஆம் பெருக்கு எனப்படும் ஆடி18 விழா மிகவும் உன்னதமானது. அன்றைய தினம் எந்த நட்சத்திரம், திதியில் வந்தாலும், புதிய முயற்சிகளை அனைத்து தரப்பினரும் மேற்கொள்ளலாம்.

ஆடிப்பெருக்கு தினத்தில் நதியோரம் உள்ள கோயில்களில் கன்னிப் பெண்கள் வழிபாடு செய்தால் சிறப்பான கணவர் அமைவர். சுமங்கலிப் பெண்கள் இதுபோன்று வழிபாடு நடத்தினால் அவர்களின் துணைவருக்கு நீண்ட ஆயுள் கிடைக்கும். சப்த கன்னிகளை உருவாக்கி ஆடிப் பெருக்கு வழிபாடு மேற்கொள்வதும் நல்ல பலனைத் தரும்.

இதேபோல் ஆடிப் பூரம் விழா கேரளாவில் விமரிசையாக கொண்டாடப்படுகிறது. தமிழகத்தில் காஞ்சி காமாட்சியம்மன் கோயிலில் மிக அருமையாக கொண்டாடப்படும். சுப நிகழ்வுகள் ஏராளமாக நடைபெறுவதால் ஆடி மாதம் பல வகையிலும் சிறந்தது.

–சிவசௌந்தர்

**ஓம் இச்சா சக்தியே போற்றி, ஓம் இணையிலா தெய்வமே போற்றி, ஓம் இரவு பகலாகி இருப்பவளே போற்றி**

# அற்புதப் பலன்களைத் தரும் ஆடி வெள்ளி வழிபாடு!

**தமிழ் வருடக் கணக்கின்படி 12 மாதங்களில் நான்காவதாக வருகின்ற மாதம் ஆடி மாதமாகும். புவியியல் மற்றும் அறிவியல் அடிப்படையில் பார்க்கும் போது ஆடிமாதம் மழைக்காலத்திற்கு முன்பாக காற்று அதிகம் வீசும் ஒரே காலமாக இருக்கிறது.**



இரண்டு பருவ நிலைக்கு நடுநிலையான மாதமாக ஆடி மாதம் வருவதால் மனிதர்களுக்கு சில வகையான நோய்கள் இந்த மாதத்தில் அதிகம் ஏற்படுகின்றன. இதை போக்குவதற்காக தான் ஆடி மாதத்தில் நோய் எதிர்ப்பு சக்தி மிகுந்த உணவான கேழ்வரகு கூழ் தானமளிப்பதை விழாவாக அறிவியல் அடிப்படையில் நமது முன்னோர்கள் கடைப்பிடித்தனர்.

அற்புதமான இந்த ஆடி மாதத்தில் வருகின்ற வெள்ளிக்கிழமைகள் அனைத்தும் மிகவும் சிறப்பு வாய்ந்தவையாகும். ஆடி மாதத்தில் வருகின்ற நான்கு வெள்ளிக்கிழமைகளில் விரதம் மேற்கொள்ளும் முறை மற்றும் அதனால் ஏற்படும் நன்மைகள் என்ன என்பதை இங்கு தெரிந்து கொள்ளலாம்.

ஆடி மாத வெள்ளிக் கிழமைகள் தோறும் அதிகாலையிலேயே எழுந்து குளித்து, முடித்து விட்டு தூய்மையான ஆடை அணிந்து கொண்டு, வீட்டின் பூஜையறையில் இருக்கின்ற அம்பாள் மற்றும் லட்சுமி படத்திற்கு வாசமுள்ள மலர்கள் சமர்ப்பித்து, மாதுளம் பழம் மற்றும் சர்க்கரை பொங்கல் போன்றவற்றை நைவேத்தியம் வைத்து, விளக்கெண்ணெய் தீபமேற்றி, அம்பாளுக்குரிய மந்திரங்கள், ஸ்தோத்திரங்கள், லலிதா சகஸ்ரநாமம் போன்றவற்றை உளமாற துதிக்க வேண்டும்.

அந்த வெள்ளிக்கிழமை தினம் முழுவதும் உண்ணாநோன்பு இருப்பது சிறப்பான பலன் தரும் என்றாலும் தற்காலத்தில் பெரும்பாலானோர் பணிக்கு செல்ல வேண்டிய நிலை இருப்பதால், அன்றைய தினம் உப்பு சேர்க்காத உணவு அல்லது பழம், பால் மட்டும் சாப்பிடுவதாலும் விரதம் இருந்த பலனை பெறலாம்.

பிறகு மாலை வேளையில் அருகில் உள்ள அம்பாள், லட்சுமி தாயார் போன்ற பெண் தெய்வங்களின் கோவிலுக்கு சென்று, அந்த தெய்வங்களுக்கு விளக்கெண்ணெய் அல்லது நெய் தீபங்கள் ஏற்றி வழிபாடு செய்ய வேண்டும்.



பின்பு கோயிலில் இருந்து வீடு திரும்பியதும் பூஜை அறைக்கு சென்று அம்பாளை வழிபட்ட பிறகு அந்த தெய்வத்திற்கு வைக்கப்பட்ட மாதுளம்பழம், சர்க்கரைப் பொங்கல் போன்றவற்றை வீட்டில் உள்ளவர்களுக்கு பிரசாதமாக தந்து, நாமும் சிறிது சாப்பிட்டு விரதத்தை முடிக்க வேண்டும். ஆடி மாதத்தில் வருகின்ற வெள்ளிக்கிழமைகள் தோறும் மேற்கண்ட முறையில்

ஓம் இயக்க முதல்வியே போற்றி, ஓம் இறைவனின் இறைவியே போற்றி, ஓம் இகம்பர சுகமே போற்றி




அம்பாளுக்கு விரத வழிபாடு செய்ய வேண்டும். இத்தகைய ஆடி மாத வெள்ளிக்கிழமை விரதம் இருந்து அம்பாள், லட்சுமி பெண் தெய்வங்களை வழிபடுபவர்களுக்கு கிரக தோஷங்களால் ஏற்படும் கடுமையான பாதிப்புகள் நீங்கி நற்பலன்கள் ஏற்படும். குடும்பத்தை பீடித்திருக்கின்ற தரித்திர நிலை விரைவில் நீங்கும். கடன் பிரச்சனைகள் தீர்வதற்கான வழி உண்டாகும். நீண்ட நாட்களாக இருக்கும் நோய்கள் விரைவில் நீங்கி உடல் ஆரோக்கியம் மேம்படும். வீட்டில் திருமணம் ஆகாத நிலையில் இருக்கும் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு விரைவில் திருமணம் நடைபெறும்.

குழந்தை பாக்கியம் இல்லாமல் ஏங்கியவர்களுக்கு குழந்தை பிறக்கும். தகுந்த வேலை கிடைக்காமல் அவதிப்படுபவர்களுக்கு விரும்பிய வேலை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிரிகள் தொல்லைகள் நீங்கி தன லாபங்கள் பெருகும். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்ட பிரச்சனைகள் தீர்ந்து ஒற்றுமை அதிகரிக்கும். இந்த ஆடி வெள்ளிக்கிழமை விரதத்தை குறிப்பாக திருமணமான பெண்கள் மேற்கொள்வதால் அவர்களுக்கு மட்டுமல்லாது அவர்களின் குடும்பத்தாருக்கும் அனைத்து விதமான நன்மைகள் உண்டாகும்.

–பேரெழிலன்

---

**அருள் ராஜயோகம், ஆன்மீகம் ஜோதிட மருத்துவ மாத இதழ்**
**புது எண் 139, பழைய 7, பண்ணா பிளசா, ஆற்காடு ரோடு**
**கோடம்பாக்கம், சென்னை–600 024**

அன்புடையீர்,

அருள் ராஜயோகம் மாதஇதழுக்கு ஆயுள் சந்தா ரூ. 5000/– செலுத்த விரும்புகிறேன். மாதா மாதம் இதழ்களை அனுப்பி வைக்கவும். நன்றி!

பெயர் ; ____________________

முகவரி ; ____________________

____________________

____________________

பணம் செலுத்தும் விவரம் (டிக் செய்து விபரங்களை குறிப்பிடவும்)

☐ பணவிடை ____________ ☐ காசோலை ____________

☐ கேட்போலை ____________ ☐ ரொக்கம் ____________

## சந்தாப் படிவம்

சந்தாதாரர் கையொப்பம்

ஓம் ஈசனின் தாயே போற்றி, ஓம் ஈஸ்வரி தாயே போற்றி, ஓம் ஈகைப் பயனே போற்றி

# பித்ருக்களின் ஆசி கிடைக்கும் ஆடி அமாவாசை



**முன்னோர்கள் வரும் ஆடி அமாவாசைபிதுர் எனப்படும் நம் முன்னோரின் திசை, தெற்கு. இதனால் தான், ஊரின் தென்திசையில், மயானம் அமைக்கின்றனர். சூரியனின் தென்திசை பயண காலமான ஆடி மாதம் அமாவாசையன்று, பிதுர்கள் பூமிக்கு வர ஆரம்பிக்கின்றனர். புரட்டாசி மாத அமாவாசையன்று மொத்தமாக கூடுகின்றனர். இதை, மகாளய அமாவாசை என்பர்.**

ஆடி அமாவாசை அன்று விரதம் இருந்து, முன்னோர்கள் வழிபாடு செய்வது குடும்பத்தில் தலைமுறை தலைமுறையாக இருந்து வந்த தடைகள் மற்றும் சாபங்கள் நீங்கும் என்பது ஐதீகம். பித்ரு லோகத்தில் இருக்கும் ஆத்மாக்கள், அதாவது முன்னோர்கள், ஆடி அமாவாசை அன்று பூமிக்கு வருகிறார்கள். எனவே, அமாவாசை என்று, பித்ருக்களை வழிபாடு செய்து, ஆசி பெறுவது வாழ்வை பல விதங்களில் மேம்படுத்தும்.

### முன்னோர்களை வழி அனுப்பும் நாள்

முன்னோர்கள் தை அமாவா சையன்று, மீண்டும் பிதுர்லோகம் திரும்புகின்றனர். ஆக, ஆடி அமாவாசையன்று, முன்னோரை வரவேற்கும் நாம், தை அமாவாசையன்று விடை கொடுத்து அனுப்பு கிறோம். இதனால் தான், 12 அமாவாசைகளும், முன்னோருக்கு திதி கொடுக்க முடியாத சூழ்நிலையில், இந்த மூன்று அமாவாசைகளுமாவது கொடுக்கட்டும் என முக்கியத்துவம் தந்துள்ளனர். எள்ளும் நீரும் போதும் முன்னோர் நம்மிடம் பெரிதாக எதையும் எதிர்பார்ப்பதில்லை. அவர்களின் தேவை, எள்ளும், நீரும் மட்டுமே. அவற்றை புண்ணியத்தலங்களுக்குச் சென்று கொடுக்க வேண்டும். அகத்தியர் தீர்த்தம், குமரி தீர்த்தம். ராமேஸ்வர தீர்த்தம் என்றெல்லாம் சொல்கிறோம். அகத்திய முனிவரின் பாதம் பட்ட இடம், பாபநாசத்திலுள்ள அகத்திய தீர்த்தம். பெருமாளும், லட்சுமியும், ராமன், சீதை எனும் மனிதர்களாகப் பிறந்து, கால் பதித்த இடம் ராமேஸ்வரம். அம்பாள் கன்னி பகவதியாக பிறந்து, பாதம் பதித்த தலம் கன்னியாகுமரி. ஞானிகள் மற்றும் தெய்வ சம்பந்தத்தால், இங்கே போய் திதி கொடுக்கும் போது, நம் பாவம் மட்டுமல்ல, முன்னோர் செய்த பாவமும் தீர்ந்து, பரம்பரைக்கே நன்மை ஏற்படுகிறது.

அன்னதானம் செய்யுங்கள் அது மட்டுமல்ல... அமா வாசையன்று, அன்னதானம், ஆடை தானம், அரிசி, காய்கறி தானம் செய்ய வேண்டும். இதனால், நமக்கு செல்வச்செழிப்பு உண்டாகும். நிறைந்த அமாவாசை அன்று துவங்கும் சுபநிகழ்ச்சிகளுக்கு, முன்னோரின் ஆசி கிடைக்கும். தன் முன்னோர்





மோட்சம் செல்லாமல், திண்டாடுவதைக் கண்ட பகீரதன், கடும் பிரயத்தனம் செய்து, கங்கையையே பூமிக்கு கொண்டு வந்து, அவர்களுக்கு விமோசனம் அளித்தான் என்கிறது புராணம்.

## புண்ணிய நதியில் நீராடல்:

முன்னோர்களுக்கு நாம் செய்யும் திதி பலன்களை நம்மிடம் இருந்து பெற்று பிதுர் தேவதைகளிடம் வழங்குபவர் சூரியன். அந்த தேவதைகளே மறைந்த நம் முன்னோரிடம் பலன்களைச் சேர்க்கின்றன. அதனாலேயே சூரியனைப் பிதுர்காரகன் என்கிறோம். அமாவாசை நாட்களில் தீர்த்தங்கரைகளில் நீராடும் போது, பிதுர்காரகராகிய சூரியனுக்கு அர்க்கியம் செய்வது (இரு கைகளாலும் நீர் விடுவது) மிகுந்த நன்மை தரும். சமுத்திரத்தில் அல்லது புண்ணிய நதிகளில் நீராடியவுடன் முழங்கால் அளவு நீரில் நின்று கொண்டு, சூரியனை நோக்கி மூன்று முறை அர்க்கியம் செய்வதன் மூலம் இவர் அருளைப் பூரணமாக பெறமுடியும். எனவே போற்றுதலுக்கு உரிய நம் முன்னோர்களை தை அமாவாசையன்று வழிபட்டு புண்ணியத் தலங்களில் நீராடினால் எண்ணற்ற பலன்களும் புண்ணியங்களும் கிடைக்கும்

## திருமண தடை நீங்கும்:

பிதுர்களுக்கு திதி கொடுப்பதை ஏதோ செய்யக் கூடாத செயலாகப் பலரும் கருதுகிறார்கள். திதியன்றும், அமாவாசை நாளிலும் வாசலில் கோலமிடுவது கூடாது என்பதால் அசுபமான நாளாக சிலர் எண்ணுகின்றனர். முன்னோர் வழிபாட்டில் முழுமையாக ஈடுபட வேண்டும் என்ற நோக்கத்திலேயே பிதுர்க்கடன் நாளன்று கோலமிடுவது போன்ற செயல்களைத் தவிர்க்க சொல்லியுள்ளனர். முன்னோரது ஆசி பெற அமாவாசை, வருஷதிதி, மகாளயபட்ச நாட்கள் உகந்தவை. இவை புண்ணிய நாட்களாகும். கேளிக்கை, சுபநிகழ்ச்சிகளை இந் நாட்களில் தவிர்க்க வேண்டும் என்பது விதி. இதன் காரணமாக இந்த நாளை ஆகாத நாளாக எடுத்துக் கொள்ளக் கூடாது. தை அமாவாசை நாளில் நம் முன்னோருக்கு உணவு, புத்தாடை படைத்து வழிபாடு செய்ய வேண்டும். அந்த ஆடை, உணவை ஏழைகளுக்கு தானமாக கொடுப்பதன் மூலம் அளவற்ற நன்மைகள் நம் வாழ்வில் உண்டாவதை நாம் உணர முடியும். தடைபட்ட திருமணம், நீண்ட நாள்பட்ட நோய் நொடிகள், மன வருத்தம் ஆகியவை விலகி சந்தோஷமும் மனநிறைவும் நம் இல்லத்திலும், உள்ளத்திலும் ஊற்றெடுக்கும்.

## காகத்திற்கு உணவிடுங்கள்:

காகம் சனீஸ்வரருக்குரிய வாகனம் என்று தெரியும். ஆனால், பிதுர் எனப்படும் முன்னோர் வழிபாட்டிலும் காகத்திற்கு முக்கியத்துவம் உண்டு. காகம் எமலோகத்தின் வாசலில் இருக்கும் என்றும், எமனின் தூதுவன் என்றும் சொல்வதுண்டு. காகத்திற்கு சாதம் வைத்தால் எமலோகத்தில் வாழும் நம் முன்னோர் அமைதி பெற்று நமக்கு ஆசியளிப்பார் என்பது நம்பிக்கை. காகம் நாம் வைத்த உணவைத் தீண்டாவிட்டால் இறந்து போன நம் முன்னோருக்கு ஏதோ குறை இருப்பதாக கருதுவதும் மக்களின் நம்பிக்கையாக இருந்து வருகிறது. பிதுர் தர்ப்பணத்திற்குரிய கயாவில் உள்ள பாறைக்கு காக சிலை என்று பெயர். அந்த பாறையில் தான் பிண்டம் வைத்து வணங்குவர். தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்று பிற காக்கைகளையும் கரைந்து அழைத்த பின்னரே, காகம் உணவு உண்ணும். அப்படிப் பட்ட உயர்ந்த ஜீவனான காகத்திற்கு உணவிடுவதன் மூலம் பிதுர்களின் ஆசியைப் பெற முடியும்.

## ஆடி அமாவாசை தர்ப்பணம் செய்ய ஏற்ற நேரம்

தர்ப்பணத்திற்கு உகந்த நேரம் என்னவென்றால், அதிகாலையில் இருந்து உச்சி வேலையான 12 மணிக்கு முன்பே கொடுத்திட வேண்டும். விரத சாப்பாடு கொடுக்க வேண்டும் என்பது மதியம் 2 மணிக்கு கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்தால் பரிபூரணமாக அவர்களுக்கு சென்றடையும்.

– சிவமணி

**ஓம் ஈசனின் இயக்கமே போற்றி, ஓம் ஈஸ்வரி ஆனவளே போற்றி, ஓம் ஈகை குணவதியே போற்றி**

# கறிவேப்பிலையில் மகிமை



## சித்த மருத்துவம்





கறிவேப்பிலையில் நிறைய உயிர்ச்சத்தும் சுண்ணாம்புச் சத்தும் இருப்பதால், பதார்த்தங்களில் மிதக்கும் கறிவேப்பிலையைத் தூக்கி எறிந்துவிடக்கூடாது. ஆகாரத்துடன் அதையும் சேர்த்து மென்று விழுங்கிவிட வேண்டும். இந்தக் கறிவேப்பிலை பல வியாதி களையும் தீர்க்கிறது. கறிவேப்பிலை உடலுக்கு பலம் உண்டாக்கக்கூடியது. பசியைத் தூண்டும் சக்தி வாய்ந்தது.

● பித்தத்தைத் தணித்து உடல் சூட்டை ஆற்றும். அதோடு கறிவேப்பிலைக் கீரை மனதுக்கு உற்சாகத்தையும் கொடுக்க வல்லது. குமட்டல், சீதபேதியால் உண்டான வயிற்று உளைச்சல், நாட்பட்ட காய்ச்சல் ஆகியவற்றைக் கறிவேப்பிலை குணப்படுத்தும். பித்த மிகுதியால் உண்டாகும் பைத்திய த்தைக் குணப்படுத்த கறிவேப்பிலை உதவுகின்றது.

● வாந்தி, நாக்கு ருசியற்றுப் போதல், வயிற்றோட்டம், சாப்பிட்டவுடன் மலங்கழிக்கும் உணர்வு, பசியற்ற நிலை, சளி ஆகியவற்றைக் கறிவேப்பிலை குணப்படுத்தும். கண்கள் ஒளி பெறவும், முடி நரைக்காமலிருக்கவும், மேனி எழில் பெறவும் கறிவேப்பிலை உதவுகின்றது. கறிவேப்பிலைச் சாறு இரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்களைப் பலப்படுத்துகிறது. பத்திய உணவு சாப்பிடுபவர்கள் கறிவேப்பிலைத் துவையலை சேர்த்துக்கொள்வது நல்லது.

● கண் ஒளி குன்றாமல், நரை திரை இல்லாமல் என்றும் இளமைப் பொலிவுடன் வாழ கறிவேப்பிலை அருமருந்தாக உதவுகிறது. அரோசிகம் எடுபட எந்த பதார்த்தத்தைச் சாப்பிட்டாலும் அது மண் போல ருசியறிய முடியாமலிருப்பதையே அரோசிகம் என்பர். அதாவது நாவில் ருசியறியும் உணர்ச்சி இழைகள் மறத்துப்போவதே இதற்குக் காரணம். இதைப் போக்க கறிவேப்பிலைத் துவையல் நன்கு பயன்படும்.

● கறிவேப்பிலையை நன்கு அரைத்து அதனுடன் முட்டையின் வெள்ளைக் கருவைச் சேர்த்து தலைக்குத் தேய்த்து குளித்தால் முடி நன்றாக வளரும். இதற்குத் தேவையான அளவு கறிவேப்பிலையை எடுத்து, அதைச் சுத்தம் பார்த்து, அம்மியில் வைத்து தேவையான அளவு இஞ்சி, சீரகம், புளி, பச்சை மிளகாய், உப்பு இவைகளை வைத்து மை போல துவையல் அரைத்து, சாப்பாட்டுடன் சேர்த்துச் சாப்பிட்டு வந்தால் நாவில் ருசியறியும் தன்மை ஏற்படும்.

● சுத்தமாக ஆய்ந்து எடுத்த கறிவேப்பிலையை அம்மியில் மை போல அரைத்து, அதை ஒரு பாத்திரத்தில் போட்டு, அதில் ஒரு எலுமிச்சம்பழத்தின் சாற்றையும் விட்டுக் கலக்கி, தினசரி காலையிலும் மாலையிலும் சாதத்தில் போட்டுக் கலந்து சாப்பிடக் கொடுத்து விட வேண்டும். அடிக்கடி இந்த துவையலை சாதத்துடன் ருசித்துச் சாப்பிட்டு வந்தால் எந்த நோயும் வராது. உடல் உறுதி பெறும். பைத்தியம் தெளிய புத்திசுவாதீனமில்லாமல் இருப்பவர்களின் புத்தியை ஸ்திரப்படுத்தி ஒரு நிலையில் நிறுத்தி, அறிவில் தெளிவை உண்டாக்க கறிவேப்பிலை நன்கு பயன்படும்.

ஆதித்யா

TV யில்



★ 27 நட்சத்திரங்களை உள்ளடக்கிய 12 ராசிகளில் உங்கள் ராசிக்கான தின பலன்

★ வழிபட வேண்டிய தெய்வம்

★ ஆன்மீக தகவல்

யோகம் ராஜயோகம் நிகழ்ச்சியில்

தினந்தோறும் காலை 7.00 மணிக்கு காணத்தவறாதீர்கள்

# ராஜயோகம்

# ஆன்மீக அறக்கட்டளை...!

(GOVT REGD : 58/99 - 22 23)



**கல்வி, மருத்துவம்,
கலாச்சரம், பண்பாடு,
உணவு, விளையாட்டு,
ஒழுக்கம் சார்ந்த
உதவிகள் மற்றும்
இந்துமத சாஸ்திர,
சம்பிரதாய ஆன்மீக
விழிப்புணர்வு
வழங்குதல்.**

உதவும் உள்ளங்கள்
தொடர்பு கொள்ள
814 814 88 44 /
814 814 82 92
website:
www.rajayogamtrust.com

# ராஜயோகம் நிகழ்ச்சிகள்









# குலதெய்வ விருட்ஷம்

ஒன்பது கிரகங்கள், 12 ராசிகள்,
12 லக்கினங்கள், 15 திதிகள்,
27 நட்ஷத்திரங்கள், 27 பட்ஷிகள்,
27 விருட்ஷங்களுக்கான
சூட்சுமக் குறியிடுகளோடு
தெய்வப்பிரசன்ன
சாஸ்திரப்படி உருவாக்கப்பட்ட
"குலதெய்வ விருட்ஷம் "



"ராஜயோகம்"
Dr. K.ராம் Ph.D., (USA)



***( height : 15 cms***
***width : 17 cms***
***weight : 489g )***

குடும்ப ஒற்றுமை,
குபேர சம்பத்து,
காரிய வெற்றி, சத்ரு ஜெயம்,
நோய், கடன்,
திருமண தடைகள் விலகி,
பதினாறு செல்வங்கள்
கிடைப்பதற்க்காக
48 வகையான பூஜைகளால்
பூஜிக்கப்பட்ட ...

## "குலதெய்வ விருட்ஷம்"

## இது பொருள் அல்ல
## "குலதெய்வ அருள்"

**Order Now**
**99404 31377 | 99529 91118**
**website: www.kuladeivavirutcham.com**



# இந்த நாட்களில் பூமி பூஜை போடலாம்!

**என்றைக்கு பூமி பூஜை போட்டு வீடு கட்டத்தொடங்க வேண்டுமென்பதை நம் முன்னோர்கள் தெளிவாகக் கூறிச் சென்றிருக்கிறார்கள். கட்டடம் கட்டுவதற்கும் பஞ்சபூத சக்திகளுக்கும் நெருங்கிய தொடர்புகள் உண்டு.**

பூமியின் இலகுத்தன்மையைப் பயன்படுத்தி, அந்த நாளில் வாஸ்து வழிபாடு செய்தால், கட்டடம் கட்டும்பணி எந்தவிதத் தடையுமில்லாமல், நல்லமுறையில் கட்டடம் வளர்ச்சி பெறும். இந்த வகையில் சித்திரை, வைகாசி, ஆடி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை, மாசி என எட்டு மாதங்களில் பூமி பூஜை செய்யலாம்.

**வாஸ்து விழிப்பு நாள்:**

*சித்திரை 10ம் தேதி சூரியன் உதயமான நேரத்திலிருந்து 5 நாழிகைக்குப் பிறகும் (ஒரு நாழிகை என்பது 24 நிமிடங்களாகும்), வைகாசி 21 ம் தேதி 8 நாழிகைக்குப் பிறகும், ஆடி 11 ம்தேதி 2 நாழிகைக்குப் பிறகும், ஆவணி 6 ம் தேதி 21 நாழிகைக்குப் பிறகும், ஐப்பசி 11 ம் தேதி 2 நாழிகைக்குப் பிறகும், கார்த்திகை 8 ம் தேதி 10 நாழிகைக்குப் பிறகும்,தை 12 ம் தேதி 8 நாழிகைக்குப் பிறகும், மாசி 22 ம் தேதி 8 நாழிகைக்குப் பிறகும் வரும் நேரமே வாஸ்து விழிப்பு நேரமாகும்.*

இந்த நாட்களில் வாஸ்து பகவான் மூன்றே முக்கால் நாழிகை வாஸ்து விழித்திருக்கின்றார். ஒரு நாழிகை என்பது 24 நிமிடங்களாகும். அதாவது ஒன்றரை மணி நேரம் வாஸ்து பகவான் விழித்திருக்கின்றார்.

இந்த ஒன்றரை மணி நேரத்தில் முதல் 18 நிமிடங்கள் காலைக் கடன்களை முடித்து குளிப்பார். அடுத்த 18 நிமிடங்கள் பூஜை செய்வார். அதற்கு அடுத்த 18 நிமிடங்கள் சாப்பிடுவார். பின்னர் 18 நிமிடங்கள் வெற்றிலை பாக்குப் போடுவார். கடைசி 18 நிமிடங்கள் ஆட்சி செய்வார். இந்த நேரத்தில் பூமி பூஜை போட்டு வீடு கட்டத் தொடங்கினால், வேலைகள் வெகு சீக்கிரம் முடியும்.

இந்தத் தேதிகளில், கிழமைகள் மாறுபட்டு வந்தாலும், இந்தத் தேதிகள் மாறுவதில்லை. அந்த விதத்தில், மார்ச் 6 ம்தேதி வாஸ்து புருஷன் விழித்துக்கொள்ளும் நாள்.

இந்த நாளில் காலை *10.36 முதல் 11.00* மணிக்குள் ரிஷப லக்னத்திலும் பூமி பூஜை செய்யலாம். அல்லது மதியம் 12.35 முதல் 1.15 மணிக்குள் மிதுன லக்னத்தில் பூமி பூஜை செய்யலாம். வாஸ்து புருஷன் விழித்திருக்கும் நாட்கள் தவிர, மற்ற சுப நட்சத்திரங்களில் வாஸ்து பூஜை செய்யலாம். அவ்வாறு செய்யும் நாட்களில் ரிஷபம், மிதுனம், விருச்சிகம் மற்றும் கும்ப லக்கினம் சிறந்தது. வாஸ்து பூஜை செய்ய திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகிய கிழமைகள் சிறந்தவை.

ரோஹிணி, மிருகசீரிஷம், புனர்பூசம், உத்திரம், சுவாதி, அனுஷம், உத்திராடம் திருவோணம், சதயம், உத்திரட்டாதி,ரேவதி ஆகிய கூடிய நாட்களில், துதியை, திரிதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி ஆகிய திதிகள் கூடிய நாட்களில் பூமி பூஜை செய்யலாம். நாம் தேர்ந்தெடுக்கும் லக்னத்துக்கு 8, 12 ம் இடங்களில் சுப கிரகங்கள் இல்லாமல் இருக்கவேண்டும் என்பது முக்கியவிதியாகும்.

உத்திராடம், பரணி, பூரம் பூராடம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி ஆகிய நட்சத்திரங்களில் உள்ளவர்கள், பூமிபூஜை செய்யாமல் வேறுநாளில் செய்வது நல்லது. மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம், ஆயில்யம், கேட்டை, ரேவதி ஆகிய நட்சத்திரக்காரர்கள் பூமி பூஜை செய்தால் பரிகார பூஜை செய்வது நல்லது.

-ராஜா

ஓம் உருவம் ஆனாய் போற்றி, ஓம் உமை அம்மையே போற்றி, ஓம் உயிரே வாழ்வே போற்றி



## மேஷம்

**செயலில் வேகமும், பேச்சில் வசியமும் கொண்ட மேஷம் ராசி பாக்கிய வான்களுக்கு நவகிரஹ, அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாகக் கிடைத்திட வாழ்த்துக்கள்!**

ஆன்மிக நண்பர்களின் நட்பு கிடைக்கும். வீரியத்தை விட காரியம் தான் முக்கியம் என்பதை உணருவீர்கள். கடந்த காலத்தில் ஏற்பட்ட சுகமான அனுபவங்களை நினைவுக்கூர்ந்து மகிழ்வீர்கள். வெளிவட்டாரத்திலும் மதிப்பு, மரியாதைக் கூடும். உழைப்பால் பணம் வரவு கூடும். அயல்நாட்டில் இருக்கும் நண்பர்களால் ஆதாயம் உண்டு. குரு சாதகமான வீடுகளில் செல்வதால் உங்களின் தோற்றப் பொலிவுக் கூடும். கவர்ச்சிகரமாகப் பேசி எல்லோரையும் ஈர்ப்பீர்கள்.

பரிகாரம்: செவ்வாய் கிழமை அன்று ஸ்ரீ கணேஷ் பகவானுக்கு துர்வாங்குர் அர்ச்சனை செய்ய வேண்டும்.



## ரிஷபம்

**விரும்பும் வெற்றியை அடைய விருப்பம் காட்டுவதில் அதிகமான ஆர்வம் கொண்ட ரிஷபம் ராசி பாக்கியவான்களுக்கு நவகிரக அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்!**

அரசால் அனுகூலம் உண்டாகும். அரசியலில் செல்வாக்குக் கூடும். சி.எம்.டி.ஏ., எம்.எம்.டி.ஏ ப்ளான் அப்ரூவல் கிடைத்து வீடு கட்டத் தொடங்குவீர்கள். பொது விழாக்கள், சுப நிகழ்ச்சிகளில் முதல் மரியாதைக் கிடைக்கும். புது பதவிக்கு உங்களுடைய பெயர் பரிந்துரை செய்யப்படும். வேலைக்கு விண்ணப்பித்திருப்பவர்களுக்கு நல்ல நிறுவனத்திலிருந்து அழைப்பு வரும். மற்றவர்களை நம்பி பெரிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம்.

பரிகாரம்: ஆலமரத்தின் வேர்களுக்கு இனிப்பான பாலை வழங்கி, அங்குள்ள ஈரமான மண்ணை

## மிதுனம்



**கற்ற விஷயங்களை எந்தவித தயக்கமும் இல்லாமல் மற்றவர்களுக்குப் போதித்து வெற்றி பல காணும் மிதுனம் ராசி பாக்கியவான்களுக்கு நவகிரஹ, அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாகக் கிடைத்திட வாழ்த்துக்கள்!**

பிரபலங்களின் அறிமுகம் கிடைக்கும். ஷேர் மூலம் பணம் வரும். அரசு காரியங்கள் விரைந்து முடியும். கௌரவப் பதவிகள் தேடி வரும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை தந்து முடிப்பீர்கள். புது வேலைக்கு முயற்சி செய்தீர்களே! எதிர்ப்புகள் குறையும். மகளுக்கு நீங்கள் எதிர்பார்த்த குடும்பத்திலிருந்து உங்கள் ரசனைக் கேற்ப நல்ல வரன் வந்தமையும்.

பரிகாரம்: இறைச்சி, மது, முட்டை மற்றும் ஆபாசம் போன்றவற்றிலிருந்து விலகி இருங்கள்.

ஓம் உயிராய் இருப்பாய் போற்றி, ஓம் உடலாய் அணைந்தாய் போற்றி, ஓம் உமாமகேஸ்வரியே போற்றி



## கடகம்

**பொறுமையும், நிதானமும், பெருந்தன் மையும் ஒருங்கே அமையப் பெற்ற கடகம் ராசி பாக்கியவான்களுக்கு நவகிரஹ அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாகக் கிடைத்திட வாழ்த்துக்கள்!**

உங்கள் முன்னேற்றத்திற்கு இது உகந்த மாதம் ஆகும். பணியிடத்தில் உங்கள் நேர்மை மற்றும் உறுதி காரணமாக அங்கீகாரமும் பெருமையும் பெறுவீர்கள். நீங்கள் வாழ்க்கையை இன்பகரமாக வாழ நினைப்பீர்கள். உங்கள் எண்ணமும் நிறைவேறும். உங்கள் தேவைகளை கேட்டுப் பெறுவதில் தயக்கம் கொள்ள வேண்டியதில்லை. பொருளாதார நிலை கணிசமாக உயரும். உங்கள் அறிவை வளர்க்க வேண்டும் என்ற விருப்பம் உங்களிடம் காணப்படும்.

பரிகாரம்: கணபதி அதர்வசிர்ஷத்தை தவறாமல் பாராயணம் செய்யவும்.



## சிம்மம்

**பொதுவாழ்வில் ஈடுபாடும், புத்திகூர்மை நிறைந்த செயல்பாடும் கொண்ட சிம்மம் ராசி பாக்கியவான்களுக்கு நவகிரக அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்!**

வி.ஐ.பிகளின் நட்பு கிடைக்கும். வெளிநாட்டிலிருக்கும் நண்பர்களால் உதவிகள் உண்டு. கடன் உதவி எதிர்பார்த்த வகையில் வந்து சேரும். பழைய இனிய அனுபவங்களை நினைவுக்கூர்ந்து மகிழ்வீர்கள். ஹிந்தி, தெலுங்குப் பேசுபவர்களால் திடீர் திருப்பம் உண்டாகும். சிறுக சிறுக சேமித்து வைத்ததில் சின்னதாக ஒரு இடம் வாங்க முயற்சி செய்வீர்கள். மூத்த சகோதரர்களால் ஆதாயம் உண்டு. வீட்டை விரிவுப்படுத்துவது, அழகுப்படுத்துவது போன்ற முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

பரிகாரம்: சூரிய உதயத்திற்கு முன் எழுந்ததும், குளித்த பின், குங்குமம் கலந்த நீரை சூரிய பகவானுக்கு சமர்பிக்கவும்.

## கன்னி

**பல விஷயங்களில் சிக்கனமாகவும், குடும்ப விஷயங்களில் தாராளமாகவும் நடத்தக்கூடிய கன்னி ராசி பாக்கியவான்களுக்கு நவகிரஹ அனுகிரஹமும், பஞ் சபூத பாக்கியமும் ஆதிக்கமாகக் கிடைத்திட வாழ்த்துக்கள்!**



உங்களுடைய வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். அதிகாரப் பதவியில் வழக்கில் வெற்றி பெறுவீர்கள். வீடு, மனை வாங்கும் யோகம் உண்டாகும். அறிவுத் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். அனுபவ அறிவை பயன்படுத்தி முன்னேறுவீர்கள். வேலைக்கு விண்ணப்பித்திருந்தவர்களுக்கு வேலைக் கிடைக்கும். உடன்பிறந்தவர்கள் உங்களின் முக்கியத்துவத்தையும், உண்மையான பாசத்தையும் உணர்ந்துக் கொள்வார்கள்.

பரிகாரம்: ஹனுமான் கோவிலில் சிவப்பு நிற பிரசாதத்தை வழங்குங்கள் மற்றும் மக்களுக்கு பிரசாதத்தை விநியோகிக்கவும்.

ஓம் ஊனுயிர் ஆனாய் போற்றி, ஓம் ஊக்கம் அருள்வாய் போற்றி, ஓம் ஊழ்வினை அறுப்பாய் போற்றி

# ஜூலை 2025 - ராசி பலன்கள்



## துலாம்

**அஞ்சா நெஞ்சமும், ஆதரிக்கும் குணமும் அமையப் பெற்ற துலாம் ராசி பாக்கியவான்களுக்கு நவகிரக அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்!**

திருமணம் தள்ளிப் போனவர்களுக்குக் கூடி வரும். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உங்களுடைய ஆலோசனைகளையும் எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். குழந்தை பாக்யம் கிடைக்கும். வேற்றுமதத்தை சார்ந்தவர்களால் உங்கள் வாழ்க்கை தரம் உயரும். பழைய பிரச்னைகளுக்கும் தீர்வு கிடைக்கும். பூர்வீக சொத்தில் மராமத்துப் பணிகள் செய்வீர்கள். சொந்த பந்தங்களின் அன்புத் தொல்லைகள் குறையும். வெள்ளிப் பொருட்கள், விலை உயர்ந்த ரத்தினங்கள், ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

பரிகாரம்: தவறாமல் கோயிலுக்குச் சென்று அங்குள்ள உங்கள் குலதெய்வத்தை தரிசிக்கவும்.



## விருச்சிகம்

**வாகன பயணத்திலும் வசீகரமான ஆடை அணிவதிலும் விருப்பமுள்ள விருச்சிகம் ராசி பாக்கியவான்களுக்கு நவகிரக அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்!**

ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பதும், தேவையற்ற பயணங்களைத் தவிர்ப்பதும் உத்தமம். பணவரவுகள் சுமாராகத் தானிருக்கும். செலவுகளில் சிக்கனத்தை கடைபிடிக்கவும். உடல் ஆரோக்கியத்தில் மிகவும் கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. எந்தவொரு காரியத்திலும் சிந்தித்துச் செயல்பட்டால் மட்டுமே வெற்றியினைப் பெறமுடியும். முடிந்தால் திருவண்ணாமலை கிரிவலம் போய் வரவும். மனைவியுடனான மோதல்கள் குறையும். அவரின் ஆரோக்யமும் சீராகும்.

பரிகாரம்: கோபம் மற்றும் எரிச்சலிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

## தனுசு



**நேர்த்தியான வாழ்க்கையில் கீர்த்தியை விரும்புபவர்களான தனுசு ராசி பாக்கியவான்களுக்கு நவகிரக அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்!**

அனுபவ அறிவால் முன்னேற்றம் உண்டாகும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். இடம், பொருள், ஏவலறிந்து பேசும் வித்தையைக் கற்றுக் கொள்வீர்கள். புது ரக ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள். பழைய வாகனத்தை மாற்றி புதுசு வாங்குவீர்கள். தந்தைவழியில் உதவிகள் உண்டு. சூரியன் சாதகமான வீடுகளில் செல்வதால் அரசால் அனுகூலம் உண்டு. அரசு காரியங்கள் விரைந்து முடியும். வழக்குகளும் சாதகமாகும். அடிமனதில் தைரியம் பிறக்கும்.

பரிகாரம்: ஆதரவற்றோர் மற்றும் ஏழை மக்களுக்கு உங்கள் திறனுக்கு ஏற்றவாறு உணவு வழங்குங்கள்.

ஓம் ஊரைக்காப்பாய் போற்றி, ஓம் ஊழலை ஒழிப்பாய் போற்றி, ஓம் ஊக்கமாய் நிறைவாய் போற்றி

2025 ஆம் ஆண்டிற்கான தினசரி ராசிபலன்களையும், பரிகாரங்களையும்
“ராஜயோகம்” YouTube சேனலில் காணலாம்



## மகரம்

**அழகை ரசிக்க வேண்டும் என்ற ஆவல் இயல்பாகவே அமையப்பெற்ற மகரம் ராசி பாக்கியவான்களுக்கு நவகிரக அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்!**

உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். வீடு, மனை வாங்குவது, விற்பது லாபகரமாக முடியும். ராஜ தந்திரத்தை பயன்படுத்தி பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறை மூலமாக தீர்வு காண்பீர்கள். வழக்கில் திடீர் திருப்பம் உண்டாகும். முன்கோபத்தால் இரத்த அழுத்தம், சகோதர வகையில் சங்கடங்கள், சொத்துப் பிரச்னைகள், பணத்தட்டுப்பாடுகளெல்லாம் வந்துச் செல்லும்.

பரிகாரம்: செவ்வாய்கிழமையன்று கோவிலில் அரிசி, வெல்லம், உளுத்தம் பருப்பு தானம் செய்யுங்கள்.



## கும்பம்

**மற்றவர்களுக்கு உதவும் உள்ளம் படைத்த குமபம் ராசி பாக்கியவான்களுக்கு நவகிரக அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்!**

மனைவி வழியில் உதவிகள் உண்டு. மனைவிவழி உறவினர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். உங்களின் நிர்வாகத் திறன் அதிகரிக்கும். அரசு காரியங்கள் விரைந்து முடியும். சிலருக்கு புது வேலையும் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். கௌரவப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். திருமணத் தடைகள் விலகும். அவர்கள் உங்களின் புதுத் திட்டங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். பழைய உறவினர், நண்பர்களை சந்தித்து மனம் விட்டுப் பேசி மகிழ்வீர்கள்.

பரிகாரம்: ஹனுமான் சாலிசாவை தவறாமல் பாராயணம் செய்யவும்.

## மீனம்

**கசந்த காலங்களில்கூட வசந்த காலங்களை நினைத்து வாழ்க்கை நடத்தக்கூடிய மீனம் ராசி பாக்கியவான்களுக்கு நவகிரஹ அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாகக் கிடைத்திட வாழ்த்துக்கள்!**

குடும்பத்தினருடன் சென்று குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உடன்பிறந்தவர்கள் ஓடி வந்து உதவுவார்கள். புது பதவி, பொறுப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். வழக்கு சாதகமாகும். சொத்து வாங்குவது, விற்பது லாபகரமாக முடியும். பழைய கடனைத் தீர்க்க புது வழி யோசிப்பீர்கள். அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். சில நாட்களில் தூக்கம் குறையும். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழந்துவிடாதீர்கள்.



பரிகாரம்: முடிந்தால் புதன் கிழமையன்று தினமும் பசுவிற்கு பசுந்தீவனம் கொடுத்து பசுவிற்கு பரிமாறவும்.

ஓம் ஊடல் நாயகியே போற்றி, ஓம் ஊழ்வினை களைவாய் போற்றி, ஓம் ஊற்றும் கருணை மழையே போற்றி

# ஆடி கிருத்திகை மகிமை!

ஆடியின் கிருத்திகை நட்சத்திரம் அல்லது கார்த்திகை நட்சத்திரம் சிவபெருமான் மற்றும் பார்வதி தேவியின் மகனான முருகப்பெருமானுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இந்த நாளில் கொண்டாடப்படும் திருவிழா ஆடி கார்த்திகை என்று அழைக்கப்படுகிறது, மேலும் ஆடி கிருத்திகை அல்லது ஆடி கிருத்திகை என்று உச்சரிக்கப்படுகிறது. இது பெரும்பாலும் தமிழ் மக்களிடையே பிரபலமான ஒரு தமிழ் பண்டிகையாகும்.



ஆடிக்கிருத்திகை தினத்தில் முருகனை வணங்க அனைத்து கவலைகள், பிரச்சினைகள், நீங்கி வாழ்வில் சகல சவுபாக்கியங்களும் சேரும் என்பது நம்பிக்கை. பேரரசர் போல வாழவும் நிம்மதியும் சந்தோஷமும் கிடைக்க ஆடிக்கிருத்திகை விரதம் இருக்கலாம். ஆடிக்கிருத்திகை ஜூலை 23ஆம் தேதியன்று சனிக் கிழமை கொண்டாடப்படுகிறது.

கார்த்திகை விரதம் ஏன் எப்படி எதற்காக என்றும் அந்த விரதம் இருந்து யாருக்கு என்ன நன்மை கிடைத்தது என்று பார்க்கலாம். முருகனுக்கு உகந்த கார்த்திகை விரதம் இருந்தாலும் அந்த ஆறுமுகனைப்போல அழகான பிள்ளை பிறக்கும். கிருத்திகை நட்சத்திரத்தில் விரதம் இருந்து தானம் செய்யும் எஜமானனும் அவன் வம்ச பரம்பரையினர்களும் அளவற்ற நன்மைகளை அடைவார்கள் என்று புராணங்கள் கூறுகின்றன.

செவ்வாய் கிரகத்தால் ஏற்படும் திருமணத்தடை, செவ்வாய் தோஷ தடை, கர்ம புத்திர தோஷம், மண், மனை சொத்து வழக்குகளில் பிரச்னைகள், சகோதரர்களால் சங்கடங்கள் குரு திசை, செவ்வாய் திசையால் பாதிக்கப்பட்டவர்கள் ஆடி கிருத்திகை தினத்தில் முருகனை நினைத்து விரதம் இருந்தால் கவலைகளும் பிரச்னைகள் நீங்குவதோடு வாழ்வில் மகிழ்ச்சி உண்டாகும். ஆடிக்கிருத்திகை நாளில் முருகனை மனதார



வேண்டினால் உயர்பதவி தேடி வரும் வீடு கட்டும் யோகம் கிடைக்கும் சக்தி தரும் கார்த்திகை விரதம் மனித உடலில் இருக்கும் ஏழு சக்கரங்களான மூலாதாரம், சுவாதிஸ்டானம், மணிபூரகம், அனாதகம், விசுத்தி, ஆக்ஞா, சகஸ்ராரா இவை பல அபூர்வ சக்திகளை எழுப்பி தர வல்லவை.

பல அற்புதங்களை செய்பவர்கள் உடலில் இந்த குறிப்பிட்ட சக்கரங்களில் ஒன்று வேலை செய்வதால் தான் சாதிக்க முடிகிறது. சாதாரண மனிதனுக்கு இவை உறங்கி கொண்டிருக்கும். இந்த சக்கரங்கள் சுழல ஆரம்பித்து விட்டால் ஒருவனுக்கு எல்லா சித்துகளும் கைவரும் என்பார்கள். ஆறுமுகப்பெருமானின் அவதாரங்கள் ஒவ்வொன்றும் சிறப்புடையது. அத்தகைய சிறப்புடைய முருகனை ஆடிக்கிருத்திகையில் வழிபட்டால் எல்லா வளமும் கிடைக்கும். இருபத்தேழு நட்சத்திரங்களில் மூன்றாவது இடத்தை பெறுவது கிருத்திகை நட்சத்திரமாகும். இதன் அதிபதி சூரிய பகவானாவார். ஆடிக்கிருத்திகை நாளில் அக்னியை நினைத்து தவமிருந்தால் குண்டலினி சக்தி ஏறும். இது புலிப்பாணி, அகத்தியர் சொன்ன நல்லநாள்.

முருகனுக்கு உகந்த கார்த்திகை விரதம் மாதாமாதம் வரும் கார்த்திகை நட்சத்திரம் கிருத்திகை விரதம் எனப்படும். கார்த்திகை பெண்கள் 6 பேர் கந்தனைப் பாலூட்டி வளர்த்த காரணத்தால் அவர்கள் 6 பேரும் முருகப்பெருமானுக்கு தாய் என்ற சிறப்பினைப் பெற்றனர். கிருத்திகை நட்சத்திரத்தன்று விரதமிருந்து முருகனை வழிபடுவோர் இன்னல்கள் அனைத்தும் நீங்கி வாழ்வில் சகல செல்வங்களும் பெற்று வாழ்வார்கள் என்று கூறி சிவபெருமான் ஆசிர்வதித்தார்.

கார்த்திகை விரத சிறப்புகள் சிவன் அளித்த வரத்தின் படி இந்த கார்த்திகை நட்சத்திரம் வரும் நன்னாளில் விரதம் இருந்து முருகனை வணங்கினால் அறிவு, செல்வம், நீண்ட ஆயுள், நிம்மதியான வாழ்க்கை, நிறைவான சொந்தங்கள், குணமுள்ள குழந்தைகள் கிடைப்பார்கள் என்பது நம்பிக்கை. கார்த்திகை விரதத்தை விநாயகர் கூறியவாறு 12 ஆண்டுகள் அனுஷ்டித்த நாரதர் முருகனருளால் தேவரிஷியாக

**சக்தி தரும் கார்த்திகை விரதம் மனித உடலில் இருக்கும் ஏழு சக்கரங்களான மூலாதாரம், சுவாதிஸ்டானம், மணிபூரகம், அனாதகம், விசுத்தி, ஆக்ஞா, சகஸ்ராரா இவை பல அபூர்வ சக்திகளை எழுப்பி தர வல்லவை. பல அற்புதங்களை செய்பவர்கள் உடலில் இந்த குறிப்பிட்ட சக்கரங்களில் ஒன்று வேலை செய்வதால் தான் சாதிக்க முடிகிறது.**

பதவி பெற்றார். திரிசங்கு, பகீரதன், அரிசந்திரன் ஆகியோர் பேரரசர்கள் ஆனார்கள் என்கிறது புராணம். உப்பில்லாத உணவு கந்தனுக்குரிய விரதங்களில் உப்பு தவிர்க்கப்படுவதை முக்கியமாய்க் கருதுகின்றனர். உப்பில்லா உணவை எடுத்துக் கொண்டு கார்த்திகை விரதமோ, சஷ்டி விரதமோ இருத்தல் சிறப்பாகவும், உயர்வாகவும் கருதப்படுகிறது. கார்த்திகை நாளில் கந்த சஷ்டி கவசம் படிப்பது சிறப்பு.

மறுநாள் ரோகிணியன்று காலையில் மீண்டும் குளித்து விட்டு முருக பக்தர்களுக்கு அன்னதானம் செய்து விட்டு சாப்பிடலாம்.

பயணித்த ஆறு கார்த்திகை விரதங்கள் ஆடி மாதத்தில் இருந்து தொடங்கி ஆறுமாதங்கள் கார்த்திகை விரதம் இருந்து தை மாதக் கார்த்திகையில் விரதத்தை முடிக்கலாம். மனத் தூய்மைக்கும், மன ஒருமைக்கும் வழிசெய்யும் விரதங்களைக் கடைப்பிடிப்பது அனைவருக்கும் நன்மையைத் தரும். வீடு நிலப்பிரச்சினை தீரும் ஜோதிட சாஸ்திர விதிகளின்படி முருகப்பெருமான் செவ்வாயின் அம்சம். ஆகையால் செவ்வாய் கிரகத்தால் ஏற்படும் திருமணத்தடை, செவ்வாய் தோஷ தடை, மண், மனை சொத்து வழக்குகளில் பிரச்சினைகள், சகோதரர்களால் சங்கடங்கள், குரு திசை, செவ்வாய் திசையால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த ஆடிக்கிருத்திகை தினத்தில் முருகனை வணங்க அனைத்து கவலைகள், பிரச்சினைகள், நீங்கி வாழ்வில் சகல சவுபாக்கியங்களும் சேரும். நம்பிக்கையுடன் மனமுருக பிரார்த்தித்து சகல நலங்களும் பெறுவோம்.

-மணி

ஓம் எழில்மிகு தேவி போற்றி, ஓம் ஏழிசைப் பயனே போற்றி, ஓம் ஏகம்பன் துணைவி போற்றி




# வானமே கூரையாக வாழும் அன்னை!

**வெக்காளி அம்மன் திருக்கோவில், உறையூர் .வானமே கூரையாக வாழும் அன்னை, காளி என்றாலும் காட்சியில் கருணை வடிவம் காட்டும் அன்னை... திருச்சிராப்பள்ளி மாநகரின் சத்திரம் பேருந்து நிலையத்தில் இருந்து 3 கி.மீ தொலைவில் வெக்காளி அம்மன் திருக்கோவில் அமைந்துள்ளது. சோழ மன்னன் காலத்தில், இத்தலத்திற்கு வந்த மன்னனின் பட்டத்து யானை அலங்காரத்தோடு, கம்பீரமாக பவனி வந்தது.**

அப்போது அதை எதிர்கொண்ட கோழி ஒன்று, சற்றும் பயம் கொள்ளாமல், சட்டெனப் பறந்து, யானையின் பிடரியின் மீது அமர்ந்து கொண்டது. இதனால் அதிர்ச்சியுற்ற பட்டத்து யானை, செய்வதறியாது நெடுநேரம் திகைத்து நின்றது. இதனால் இத்தலம் 'கோழியூர்' என்றும், யானையைக் குறிக்கும் விதமாக 'வாரணம்' என்றும் அழைக்கப்பட்டது.

இதனை மெய்ப்பிக்கும் விதமாக, இத்தலத்தில் உள்ள பஞ்சவர்ணநாதர் கோவில், அம்மன் சன்னிதி கருவறை வெளிச்சுவரில், இக்காட்சி புடைப்புச் சிற்பமாக அமைந்துள்ளது. சிலப்பதிகாரத்தில் கூறப்படும் நெடுங்கிள்ளியின் மகனான பெருநற்கிள்ளி எழுப்பிய பத்தினிக் கோட்டமே 'வெக்காளி ஆலயம்' என கூறப்படுகிறது. தலவரலாறு

சாரமா முனிவர் என்பவர், அபூர்வ பூச்செடிகளைக் கொண்டு உறையூரில் நந்தவனம் அமைத்தார்.

அந்த நந்தவனத்தில் மலரும் மலர்களை மாலையாகத் தொடுத்து, அருகே உள்ள தாயுமான சுவாமிக்கு நாள்தோறும் சமர்ப்பித்து வந்தார். இந்த நிலையில் பூ வணிகன் ஒருவன், அந்தப் பகுதி மன்னனை மகிழ்விப்பதற்காக சாரமா முனிவரின் நந்தவனத்தில் இருந்து மலர்களை திருட்டுத்தனமாக பறித்துக் கொடுத்து வந்தான். ஒரு நாள் இதனைக் கண்டறிந்த சாரமா முனிவர், மன்னனிடம் போய் முறையிட்டார். மன்னனோ, முனிவரின் புகாரை புறக்கணித்த தோடு அல்லாமல், பூ வணிகனை ஊக்குவித்தான்.

இதனால் தவித்துப் போன சாரமா முனிவர், திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை என்று எண்ணி, தாயுமான சுவாமிகளிடமே தனது புகாரை சொல்லி வழிபட்டார். தனக்கு நேரும் குறைகளைக் கூட தாங்கிக் கொள்ளும் இறைவன், தன் அடியார்கள் படும் துயரைத் தாங்கிக்கொள்ள மாட்டார் என்பதே உண்மை. இதனால் கிழக்கு நோக்கிய இறைவன், கோபக்கனல் கொண்டு மேற்குநோக்கி திருப்பினார்.

அவரது உக்கிரப் பார்வையால், உறையூரில் மண் மழை பொழிந்தது. இதில் அங்கு வசித்த மக்களின் வீடுகள் அழிந்தன. மக்கள் செய்வதறியாது திகைத்தனர். அனைவரும் உறையூரில் உள்ள வெக்காளி அம்மனிடம் சரண் புகுந்தனர். அன்னை வெக்காளி, தம்

**ஓம் ஏகாந்த ருபிணியே போற்றி, ஓம் ஏழையை காப்பாய் போற்றி, ஓம் ஐங்கரன் தாயே போற்றி**

மக்களுக்காக தாயுமானவரிடம் வேண்ட, மண் மாரி பொழிவது நின்றது.

மக்கள் வீடு இழந்து நின்றனர். மக்களின் துயரம் கண்டு வருந்திய அன்னை, மக்கள் அனைவருக்குமே வீடு கிடைக்கும் வரை நானும் வெட்ட வெளியிலேயே வாழ்வேன் என்று சபதம் செய்து வானமே கூரையாக வாழத் தொடங்கினாள். இன்றளவும் வீடற்றவர்கள் வாழ்ந்து வருவதால், அன்னையும் தன் சபதப்படியே வெட்ட வெளியில் வாழ்ந்து வருவதாக தல வரலாறு சொல்கிறது. ஆலய அமைப்பு சுற்றிலும் எழிலான மண்டபம் இருக்க, அன்னை வெக்காளி மட்டும் தன் வாக்குப்படி வெட்டவெளியில் நடுநாயகமாக வடக்கு முகமாய் அருள்காட்சி வழங்குகிறாள்.

ஆலயத்திற்கு தெற்கு, வடக்கு வாசல்கள் உள்ளன. தெற்கு வாசலில் நுழைந்தால் வல்லப கணபதி, விசாலாட்சி சமேத விஸ்வநாதர், வள்ளி தெய்வானை சமேத மயூர முருகன், காத்தவராயன், புலி வாகனத்துடன் கூடிய பெரியண்ணன், மதுரைவீரன், உற்சவர் வெக்காளி, வடக்கு சுவரில் துர்க்கை, பொங்கு சனீஸ்வரர் என அனைத்து சன்னிதிகளும் ஒருங்கே அமைந்துள்ளன. அன்னை வெக்காளி, பெயரில் தான் காளி. வடிவத்தில்



கருணை கொண்ட முகம். கோரைப் பற்களின் சீற்றம் கிடையாது. சிரித்த முகம், சிவந்த வாய், அக்னிச் சுவாலையுடன் கூடிய கிரீடம், அதில் நாகமும் அமைந்துள்ளது.




நான்கு கரங்களில் மேற்கரங்கள் இரண்டில் உடுக்கை, பாசம், கீழே வலது கரம் சூலம் ஏந்தியிருக்கிறாள். வலது காலை மடித்து, இடது காலை தொங்கவிட்டு, அரக்கனை மிதித்த விதமாக காட்சி தருகின்றாள். பொதுவாக, இடதுகாலை மடித்து காட்சிதரும் கோலத்திற்கு மாறாக, வலது காலை மடித்து காட்சி தருவது குறிப்பிடத்தக்கது.

இது ‘வீர ஆசனம்’ என்று அழைக்கப்படுகிறது. திருவிழாக்கள் சித்திரை ஐந்து நாட்கள் திருவிழா, வைகாசி கடைசி வெள்ளி " மாம்பழஅபிஷேகம்" , ஆனி கடைசி வெள்ளி காய்கனிகள் அலங்கார வழிபாடு., ஆடி அனைத்து வெள்ளிகளும் சிறப்பு வழிபாடு. ஆவணி "சண்டிஹோமம்". புரட்டாசி நவராத்திரி விழா. கார்த்திகை தீபம். தை பொங்கல் சிறப்பு வழிபாடு, தைப்பூசம் புறப்பாடு. மாசி கடைசி ஞாயிறு "லட்சார்ச்சனை". பங்குனி முதல் வெள்ளியில் பூச்சொரிதல் விழா. கருமாரி எங்கள் தாயே கருமாரி தேவி கருமாரி துணை நீயே மகமாயி ஆயிரம் கண்கள் உடையவளே ஆலயத்தின் தலைமகளே கடைக் கண்ணாலே பார்த்தருள்வாய் காலமெல்லாம் காத்தருள்வாய் (தாயே) அன்னை உந்தன் சன்னதியில் அனைவரும் ஒன்றாய் கூடிடுவோம் அம்மா உந்தன் பொன்னடியில் அனுதினமும் சரணடைவோம் (தாயே) சிங்கமுக வாகனத்தில் சிங்கார மாரியம்மா வந்துவரம் தந்திடுவாய் எங்கள் குல தெய்வம் மாரியம்மா ஓம் சக்தி ஓம் ... ஓம் சக்தி ஓம் ...

-அனுபிரேம்

**ஓம் ஐயனின் பாகமே போற்றி, ஓம் ஐயம் தெளிந்தாய் போற்றி, ஓம் ஐம்பொறி செயலே போற்றி**

# மாங்கல்ய பலம் அருளும் திருவேற்காடு கருமாரியம்மன்!



'பாம்பே தலையணியாம், வேப்பிலையோ பஞ்சு மெத்தை' என அம்மன் தாலாட்டில் விவரிக்கும் திருவேற்காடு கருமாரியம்மன் திருக்கோலம் அப்படியே காண வேண்டுமா? அப்படியானால் நீங்கள் திருவேற்காடுக்குத்தான் வரவேண்டும். ஆம், மிகப்பெரிய புற்றில் கருநாகமாக அன்னை குடி கொண்டு இருந்ததும், வேம்பு வடிவமாகவே சக்தி உருமாறி நின்றதும் இங்குதான். அருள் பொழிய நாகமும், மருந்தாக வேம்பும் இங்கே காட்சி தருவது அற்புதமான காட்சி.

- மாரி என்றால் மழை போன்றவள். கருமாரி என்றால் கரியநிறத்து மழை மேகத்தை போன்று அருளை வாரி வழங்கும் அம்மன் என்று பொருள். க கலைமகள்; ரு ருத்ரி; மா திருமகள்; ரி ரீங்காரி (நாத வடிவானவள்) என இந்த அம்மனின் நான்கு அட்சரங்களுக்கும் பொருள் கூறுகிறது தலவரலாறு.



- சென்னையிலிருந்து 20 கி.மீ., தொலைவில் திருவேற்காட்டில் கருமாரியம்மனின் ஆலயம் அமைந்துள்ளது. வேலமரக்காட்டில் அன்னை இருந்ததால் வேற்காடு எனப் பெயர் உருவானது.
- மூலவரான அன்னை சுயம்புவாக சாந்தசொரூபியாக காட்சி அளிக்கிறாள். இவளுக்குப் பின்பு இருக்கும் அம்மன் கத்தி, சூலம், டமருகம், கபாலம் ஏந்தி காண்பவரை மெய்சிலிர்க்கச் செய்யும்படி காட்சி தருகிறாள்.
- பிராகாரத்தில் இருக்கும் உற்ஸவ அம்மன் ஊஞ்சலில் அழகுடன் காட்சி தருகிறாள். மேலும் இங்குள்ள மரச்சிலை அம்மன் சிறப்பானவள். இவளுக்கு ரூபாய் நோட்டு மாலையாக அணிவிக்கப்படுகிறது. இவளை வேண்டினால் செல்வவளம் பெருகும்.
- அரச மர விநாயகர், வள்ளி தெய்வயானை சமேத முருகர், பிரத்யங்கரா தேவி, நவகிரகம், சீனிவாச பெருமாள், ஆஞ்சநேயர், தட்சிணாமூர்த்தி, காயத்ரி, மஹாலக்ஷ்மி, அங்காளம்மன், சாவித்ரி, துர்கை, ராஜராஜேஸ்வரி எனப் பல தெய்வங்களின் சந்நிதிகள் இந்த ஆலயத்தில் அமைந்துள்ளன.

ஓம் ஐம்புலன் சக்தியே போற்றிஓம் ஒருமாரி உருமாரி போற்றி, ஓம் ஒன்பான் சுவையே போற்றி



- கருமாரியம்மனின் அருளை நாடி வரும் பக்தர்களுக்குத் திருமண வரம், குழந்தை வரம், வியாபார வளர்ச்சி, உடல் ஆரோக்கியம் போன்ற பல பலன்களை அள்ளித் தருகிறாள்.
- சகல நோய்களையும் தீர்க்கும் அம்மனின் பிரசாதமான வேப்பிலையை மக்கள் பக்தியுடன் பெற்றுச் செல்கின்றனர். தீர்த்தமும் வேப்பிலையும் தீராத நோய்களைத் தீர்க்கும் என்பது நம்பிக்கை. வேப்பிலையும் பிரம்பும் கொண்டு இங்கு மந்திரிக்கப்பட்ட மக்கள், எந்த பயமும் இன்றி மகிழ்ச்சி கொள்கிறார்கள். ராகு, கேது தோஷம் உள்ளவர்கள் இங்குள்ள புற்றில் பால் ஊற்றினால் தோஷங்கள் விலகுகின்றன.
- திருவிளக்கு பூஜை, வேப்பஞ்சேலை அணிதல், முடிகாணிக்கை, தேர் இழுத்தல், குங்கும அபிஷேகம், உப்பு காணிக்கை, மாலை அணிவித்தல், சங்காபிஷேகம், கலசாபிஷேகம், கல்யாண உற்ஸவம், பொங்கல் வைத்தல், அக்கினி சட்டி எடுத்தல், அங்கபிரதட்சணம், கண்ணடக்கம், வெள்ளிக்காணிக்கை என இந்தக் கோயிலில்தான் எத்தனை எத்தனை வேண்டுதல் முறைகள்! வந்து பார்த்தால் பரவச அனுபவத்தை நீங்கள் கட்டாயம் பெறுவீர்கள்.
- ஒருமுறை சூரிய பகவான் சக்தியை அவமதித்ததால், கோபம் கொண்ட சக்தி அவனை சபித்து இருளாக்கினாள். பின்னர் கோபம் தணிந்த அன்னை சூரியனின் வேண்டுகோளுக்காக இந்த தலத்தில் அமர்ந்து சூரியனின் பூஜையைப் பெறுகிறாள் என்று தலவரலாறு கூறுகிறது. புற்றில் வாழ்ந்த நாகம் ஒன்று அம்மனின் அருட்காட்சியைக் காட்டியதால் இங்கு கோயில் உருவானதாகக் கூறுகிறார்கள்.
- புற்றில் இருந்த அம்மன் சுயம்புவாக வெளியானதால் கருவில் இல்லாத கருமாரி அன்னை என்று போற்றப்படுகிறாள்.
- ஆடி மாதம் தொடங்கி புரட்டாசி வரையிலான 12 வரங்களும் இங்கு அம்மனுக்கு சிறப்பான பண்டிகை நாள்கள். மேலும் தை மாத பிரம்மோற்ஸவம், அமாவாசை, சித்ரா பௌர்ணமி, நவராத்திரி என எல்லா மாதங்களுமே அம்மனுக்கு இங்கு விழா நாள்கள்தான்.
- திருஞானசம்பந்தர் பதிகம் பாடிய திருக்கோயிலான வேதபுரீஸ்வரர் பாலாம்பிகை ஆலயமும் அருகிலேயே உள்ளது. அகத்தியருக்குத் திருமணக் காட்சி அருளிய தலம் இது.
- அறுபத்து மூன்று நாயன்மார்களில் மூர்க்க நாயனார் அவதரித்த தலம் திருவேற்காடு.
- காலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை திறந்திருக்கும் திருவேற்காடு கருமாரியம்மன் கோயில் பக்தர்களுக்கு ஒரு ஆன்மிக மருத்துவமனையாகவே விளங்கி வருகிறது,
- இந்த ஆலயத்தில் இருக்கும் 'பதி விளக்கு' அணையாத விளக்கு. அம்மனையும், இந்த விளக்கையும் தரிசித்தால் மாங்கல்ய பலம் பெறுவார்கள் என்பது ஐதீகம்.
- தன்னை நம்பி வரும் பெண்களுக்கு மாங்கல்ய வரமளித்து, அவர்களை சுமங்கலியாக வாழ வைக்கும் இந்த அம்மனுக்கு தாலிகளே அதிகம் காணிக்கையாக அளிக்கப்படுகிறது. செவ்வாய் தோறும் இங்கு காலை 10 மணியளவில் செய்யப்படும் மாங்கல்ய தோஷ பரிகார பூஜை சிறப்பானது.

எல்லா ஞாயிற்றுக்கிழமையும் இங்கு சிறப்பான நாளாக இருந்து வருகிறது. அருள் சுரக்கும் அம்மனின் அற்புதத்தைக் காண வேண்டும் என்றால் நீங்கள் இங்கு வந்தால்தான் இயலும். அம்மாவைத் தேடி வரும் பிள்ளைகளாக இங்கு நாளுக்கு நாள் பக்தர்களின் கூட்டம் பெருகி வருகிறது. அதில் நீங்களும் ஒருவராக இருந்து அருளாசியைப் பெற்று வாருங்களேன்.

–கனகா

**ஓம் ஒலி ஒளி ஆனாய் போற்றி, ஓம் ஒப்பில்லா சக்தி போற்றி, ஓம் ஒழுக்கம் அருள்வாய் போற்றி**

**திருச்சி கோயில்கள் சமயபுரம் மாரியம்மன்: கண்ணபுரத்தில் குடி கொண்டிருந்த அன்னை புற்று வடிவில் வேப்பமரம் சூழ காத்திருந்தாள். அவள் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் காலமும் ஒருநாள் வந்தது.**



# ஆயிரம் ஆயிரம் கண்ணுடையாள்!

ஆடி மாதம் பிறந்துவிட்டது. செவ்வாய், வெள்ளி, ஞாயிற்றுக் கிழமைகளில் அம்மன் கோயில்கள் எல்லாம் பெண்கள் கூட்டம் அலைமோதும். அண்டசராசரத்திலும் இயங்கிக் கொண்டிருக்கும் ஆதி சக்தியை ஆடி மாதத்தில் வழிபடுவது சிறப்பானது. தமிழகத்தில் உள்ள சக்தி தலங்களுக்கு எல்லாம் தலைமை பீடம் என்றால் அது சமயபுரம் மாரியம்மன் கோயில்தான் எனலாம்.

சமயத்தில் வந்து காக்கும் மாரியம்மன் பெண்களின் தாயாக விளங்குகிறாள். இந்த ஊர் கண்ணபுரம் என்றும் இங்கு வீற்றிருக்கும் மகமாயி கண்ணபுர ஆத்தாள் என்றும் வணங்கப்படுகிறாள். விக்கிரமபுரம், மாகாளி புரம் என்றும் இந்த ஊருக்கு பெயர்கள் உண்டு.

பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு அன்னை சக்தியின் ஆதிவடிவம் ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலில் ‘வைஷ்ணவி’ என்ற பெயரில் குடி கொண்டிருந்தாளாம். துடியான இந்த சக்தியின் உக்கிரம் தாங்காத அப்போதிருந்த ஜீயர் சுவாமிகள், அந்த ஸ்ரீசக்கர வடிவிலான அன்னையை கண்ணபுரம் என்ற தலத்தில் பிரதிஷ்டை செய்தாராம்.

ஆண்டுகள் பல ஓடின. கண்ண புரத்தில் குடி கொண்டிருந்த அன்னை புற்று வடிவில் வேப்பமரம்

ஓம் ஓங்காரி ஆனாய் போற்றி, ஓம் ஓங்காரி அங்காளி போற்றி, ஓம் ஓம்சக்தி தாயே போற்றி




சூழ காத்திருந்தாள். அவள் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் காலமும் ஒருநாள் வந்தது.

தென்பாண்டி நாட்டில் திருமணம் முடித்துக் கொண்ட தம்பதி இருவர் தங்களது உறவினர்களோடு காவிரியைத் தாண்டி வந்து கொண்டிருந்தார்கள். மாலை நெருங்கிக் கொண்டிருந்தது. இருட்டுவதற்குள் அடுத்த ஊரை அடைந்துவிட வேண்டும் என்று கூட்டம் வேகமாக நடைபோட்டது. முதியவர்களும் குழந்தைகளும் மட்டும் மூடப்பட்ட வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்தனர். இருள் சூழத் தொடங்கியது. அது அடர்ந்த வனம். தீப்பந்தங்களின் உதவியோடு அவர்களின் பயணம் தொடர்ந்தது.

அந்த வேளையில் பெரும் கள்வர் கூட்டம் ஒன்று அவர்களை வழி மறித்தது. திடீரென தாக்குதல் நடத்தி, பொன்னையும் பொருளையும் கவர்ந்து கொண்டது. மூவர் கொல்லப்பட்டனர். புது மாப்பிள்ளை உள்ளிட்ட சில வாலிபர்கள் கள்வர்களால் கொண்டு செல்லப்பட்டனர். இந்தத் தாக்குதல்கள் நடந்து கொண்டிருந்த வேளையில் மானம் காக்க வேண்டி மணமகளும் அவளுடைய தோழி ஒருத்தியும் அங்கிருந்து தப்பி காட்டுக்குள் மறைந்தனர்.

இடையில் தோழியும் வழி மாறி சென்றுவிட, மணப்பெண் மட்டும் அழுதபடி ஓரிடத்தில் இளைப்பாறினாள். வெகு தூரத்தில் வெளிச்சம் ஒன்று மினுக்கிட்டு கொண்டிருந்தது. அதை நோக்கிச் சென்றாள். அது சமயபுரத்தாள் எனும் மகமாயி குடி கொண்டிருந்த இடம். அந்த இடத்தை அடைந்ததுமே மணப்பெண் வெடித்து அழுதாள்.

"அம்மா, என் குல தேவியே, இது நியாயமா! காலையில் ஏறிய திருமாங்கல்யம் இரவுக்குள்ளாகவே இறங்கிவிட்டதே, என் உறவுகளும் சுற்றங்களும் என்னை விட்டுப் போய்விட்டார்களே, காலமெல்லாம் உன்னையே நம்பி இருந்த என்னை கைவிட்டு விட்டாயே! ஆயிரம் கண்ணுடையாள் என்று உன்னை சொல்கிறார்களே, அதில் ஒரு கண் கூடவா எனக்காகத் திறக்கவில்லை. அத்தனை கண்ணும் அழிந்து போனதா, தெய்வம் என்று உன்னை நம்பியவளுக்கு இதுதான் நீ காட்டும் நியாயமா! சத்தியமாகச் சொல்கிறேன். இன்று இரவுக்குள் எனக்கு நியாயம் கிடைக்காவிட்டால், என் உறவுகள் வந்து சேராவிட்டால், இதோ நீ குடி கொண்டிருக்கும் இதே மரத்தில் தூக்கிட்டு தூங்குவேன். என் சாவுக்கு காரணம் நீயே என்று மண்ணில் எழுதி வைத்துவிட்டு செத்துப் போவேன். இது உன் மீது ஆணை. என் திருமாங்கல்யம் மீது ஆணை" என்று வெஞ்சினம் கூறி சபதம் இட்டாள் அந்த மணமகள்.

இரவு நீண்டது. நள்ளிரவில் தனித்து அந்த மரத்தடியே அமர்ந்திருந்தாள் மணமகள். ஓடி வந்த களைப்பும் சோகமும் அவளை உறக்கத்தில் ஆழ்த்தியது. எனினும் வலுக்கட்டாயமாக விழித்திருந்தாள். தொலைவில் ஒரு சலங்கை சத்தம் கேட்டது. மத்திம வயதுள்ள ஒரு பெண் அவளை நெருங்கினாள். புதிதாக வந்த பெண்ணின் அழகும் தேஜசும் அந்த மணமகளைக் கவனம் கொள்ளச் செய்தது. "நீ யாரம்மா?" என்று அந்த மத்திம வயது பெண் கேட்கவும், எல்லா கதையையும் மணப்பெண் கூறினாள். எந்த உணர்வுமின்றி அந்தக் கதையை கேட்ட அந்த மஞ்சள் புடவைக்காரி, "நிச்சயம் உனக்கு நீதி கிடைக்கும் கவலைப்படாதே" என்று சொல்லி விட்டு, "தலையெல்லாம் அரிக்கிறது, கொஞ்சம் தலையைப் பார்த்துவிடேன்" என்றாள்.

**ஓம் ஒருவாய் நின்றாய் போற்றி, ஓம் ஓங்கார சக்தியே போற்றி, ஓம் கல்விக் கடலே போற்றி**

அருள் ராஜயோகம்

மலர்-12 இதழ்-01 ஜூலை-2025

வெளியிடுபவர் / ஆசிரியர்

SRJ "ராஜயோகம்"

Dr. K. RAMAAYYAPPAN Ph.D., (USA)

அருள் ராஜயோகம்

ஆன்மீக .ஜோதிட.மருத்துவ மாத இதழ்

புது எண் 139, பழைய எண் 7,
பன்னா பிளாசா, ஆற்காடு ரோடு,
கோடம்பாக்கம், சென்னை – 24.

தொலைபேசி எண் ; 044–24849187

அலைபேசி எண்கள் ;

99404 31377 / 96772 76129
99529 91118 / 98401 60068

e-mail : arulrajayogam@gmail.com
website : www.arulrajayogam.com

ஜோதிடம், ஆன்மீகம், மருத்துவம் சம்பந்தமான தங்களின் படைப்புகளையும், புகைப்படங்களையும் அனுப்பி வைக்கவும். ஆசிரியர் குழுவின் பரீசீலனைக்குப் பிறகு பிரசுரிக்கப்படும்.

ஆயுள் சந்தா
ரூ. 5000/-



எந்த காலத்திலும் பெண்களுக்கு தலை பார்த்து விடுவது என்பது விருப்பமான செயல் என்பதால் மணப்பெண்ணும் அவள் தலையைப் பிரித்துப் பார்க்கத் தொடங்கினாள். அவ்வளவுதான், அலறிவிட்டாள் அந்த மணமகள். ஆம், அந்த மஞ்சள் புடவைக்காரியின் ரோமக்கால்கள் ஒவ்வொன்றிலும் ஒரு கண் விழித்துப் பார்த்துக் கொண்டிருந்தது! "தாயே" என்று அவள் கதறியதும், "எனக்கா கண் அழிந்து விட்டது என்றாய், நான் ஆயிரமாயிரம் கண் உடையவள்! அதனால்தான் இந்த இடமே கண்ணபுரம் என்றானது. உனக்கான நீதி காலையில் கிடைக்கும். பொறுத்திரு! நான் நீதியை வழங்குவதில் எத்தனை பெரிய நீதிபதி என்று நீயே எனக்கு சாட்சியாவாய்!" என்று கூறிய அந்த மஞ்சள் புடவைக்காரி மகமாயியாக, மாரியம்மனாக உருமாறி மறைந்து போனாள். வெலவெலத்துப்போன மணமகளோ அம்மனைக் கண்ட அதிர்ச்சியில் மயங்கி விழுந்தாள்.

பொழுது விடிந்தது. விஜயநகர ஆட்சியைச் சேர்ந்த காவலர்கள் பலர், அந்தக் கள்வர்களையும் அவர்கள் கடத்திக்கொண்டு போன சிலரையும் கூட்டிக்கொண்டு அங்கே வந்தனர். இறந்துபோன மூவர் தவிர அந்த பெண்ணின் உறவுகள் எல்லாம் அவளைக் கண்டு அணைத்துக் கொண்டனர். கள்வர்களுக்குத் தண்டனை கிடைத்தது. மணமகளுக்கும் திரும்பவும் ஓர் இனிமையான வாழ்வு கிடைத்தது. எல்லாம் சமயபுரத்தாளின் பேரருளின் விளைவாக நடந்தது. அந்த பெண் தன்னாலான பொருளுதவியை கண்ணபுரத்து ஆலயத்துக்கு அளித்தாள். விஜயநகர ஆட்சியில் கோயில் சிறியதாகக் கட்டப்பட்டது. பிறகு கி.பி.1804ல் விஜயரங்க சொக்கநாத நாயக்க மன்னரால் தற்போதைய ஆலயம் கட்டப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை ஆயிரம் ஆயிரம் கண்கள் கொண்ட மகமாயி எல்லோரையும் கவனித்து ஆட்சி செய்யும் தாயாக விளங்கி வருகிறாள்.

●

–சக்தி

Owned & Published by **K.RAMAAYYAPPAN** Published from N.No 139, O.No. 7, Panna Plaza, Arcot Road, Kodambakkam, Chennai - 600 024 and Printed by Mrs. **R.RADHA,** at **APSARA ART PRINTERS**, 18 (N.No. 67), P.V.Koil I Street, Pudupet, Royapettah, Chennai - 600 014. Editor : **K.RAMAAYYAPPAN.**

# அற்புத ஆற்றல்களை அள்ளித்தரும் அருட்பெரும் நூல்கள்

## ஜோதிடர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்!

## சூட்சுமத்தை உணர்த்திடும் அருட்பிரசாதம்!!

AP 001




ரூ.350/-

AP 002




ரூ.350/-

AP 003




ரூ.250/-

AP 004




ரூ.300/-

**8 நூல்களும் இணைந்த (COMBO OFFER)**

முந்துங்கள்! இச்சலுகை குறிப்பிட்ட காலம் வரை

~~ரூ. 3400/-~~

**ரூ. 3100/-**

AP 005




ரூ.550/-

AP 006




ரூ.425/-

AP 007




ரூ.425/-

மேலும் தனி புத்தகம் வேண்டுவோர் அந்தந்த புத்தகத்திற்குரிய தொகையை கிழ்கண்ட எமது வங்கி கணக்கில் பணம் செலுத்திவிட்டு தொடர்புக்கொள்ளவும் புத்தகம் உங்களுக்கு பதிவுத் தபால் (Regd. Parcel) மூலம் அனுப்பி வைக்கப்படும். கொரியர் மூலம் அனுப்ப இயலாது

**செல்: 72999 21880 / 88386 38900**

பணம் அனுப்ப வேண்டிய Bank Details

1. **C. Raju & R. Radha,**
   Post Office Savings Bank
   A/C No. 3610336507 (Chennai-14)

2. **C. Raju & R. Radha,**
   Karur Vysya Bank
   (Whites Road, Chennai-14)
   A/C No. 1219172000006855,
   IFSC - KVBL0001219

3. **C. Raju & R. Radha,**
   Tamilnad Mercantile Bank
   (Chennai TTK Road-Royapettah)
   A/C No. 123100050303219,
   IFSC - TMBL0000123

4. **Apsara Publications,**
   IDBI Bank
   (Chennai-Gopalapuram)
   A/C No. 1654102000000143,
   IFSC - IBKL0001654

5. **C. Raju, Indian Bank**
   (Chennai-Royapettah)
   A/C No. 426677897,
   IFSC - IDIB000R021




AP 008 ரூ.750/-

**ARUL RAJAYOGAM** TAMIL MONTHLY Registrar of Newspaper for India No. TNTAM/2014/57494 Registered: TN/CC(S) DN 521/24-26. Posted at Patrika Channel Egmore RMS. Date of Publication: 1st week of every month. DATE OF POSTING: June 21-27

